விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 20 வியாழக்கிழமை (05.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 322

## வடக்கில் 9 ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் இணைக்க ராஜபக்ஷ அரசு திட்டம்

### ஆளுநர் தலைமையிலான கூட்டத்தில் பேச்சு மாதம் 60 ஆயிரம் ரூபாய் சம்பளமாம்

(கொழும்பு)
வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் இருந்தும் சுமார் 9 ஆயிரம் தமிழ் இளைஞர், யுவதிகளை இராணுவத்தில் இணைக்க தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.
குறித்த விடயம் 19

## அரிசிக்கு சில்லறை விலை நிர்ணயம்

(கொழும்பு)
நேற்று புதன்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அரிசிக்கான அதிக 19

## திருநெல்வேலியில் வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - திருநெல்வேலிப் பகுதியில் வீடு புகுந்து வாள்வெட்டுத் தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.
இந்த வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவமானது நேற்று முன்தினம் 19

### சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற பொதுமக்கள் பழக வேண்டும்

# நாட்டை முடக்க வேண்டிய தேவையில்லை

### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)
கொரோனா வைரஸை கட்டுப்படுத்த பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை முறையாகப் பின்பற்றினால், நாட்டை முடக்க வேண்டிய தேவை எழாது என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊரடங்கு உத்தரவை மட்டும் சுமத்துவதன் மூலம் மக்களின் நடத்தையை தொடர்ந்து தீர்மானிக்க முடியாது. கோவிட் - 19 தொற்று நோயைக் கட்டுப்படுத்த ஒரு சாத்தியமான தீர்வு கிடைக்கும் வரை நாட்டை பூட்டுக்குள் வைப்பது சாத்தியமில்லை என்று வலியுறுத்தினார். (19ஆம் பக்கம் பார்க்க)

சிவல்புரி சிங்காரம் எழுதும்
குரு பெயர்ச்சி
நாளை முதல் உங்கள் வலம்புரியில்

## இலங்கையில் கொரோனாவால் 24ஆவது மரணம்

(கொழும்பு)
இலங்கையில் 24ஆவது கொரோனா மரணம் பதிவாகியுள்ளதாக 19

## நேற்று 443

(கொழும்பு)
இலங்கைக்குள் நேற்று மாத்திரம் 443 பேர் கொரோனா தொற் 19

### கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி

## விசேட கொரோனா வைத்தியசாலையில்

### 18 பேர் நேற்று அனுமதி

(யாழ்ப்பாணம்)
கொரோனாத் தொற்றுக்கு உள்ளான பதினெட்டுப் பேர் நேற்று யாழ்ப் 19

### அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

## எதிர்க்கட்சி வேட்பாளர் ஜோ பைடன் முன்னிலை

(கொழும்பு)
அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர்ஜோபைடன 19

### சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராக குரல் கொடுத்த

## மன்னார் இலுப்பைக்கடவை கிராம அலுவலர் வெட்டிக்கொலை





(மன்னார்)
சட்டவிரோத மண் அகழ்வுக்கு எதிராக குரல் கொடுத்த மன்னார் இலுப்பைக்கடவை கிராம அலுவலர் 19

## எமது உறவுகள் புதைக்கப்பட்ட இடத்தில் கண்ணீர் சிந்தி அஞ்சலிக்க அனுமதியுங்கள்

### ஜனாதிபதி கோட்டாபயவுக்கு சிறீதரன் எம்.பி கடிதம்

(யாழ்ப்பாணம்)
எமது உறவுகள் புதைக்கப்பட்ட இடத்தில் விளக்கேற்றி, மலர் தூவி கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதி தாருங்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சிறீதரன் எம்.பி கடிதம் அனுப்பியுள்ளார்.
அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கடந்த நான்கு வருடங்களாக இலங்கை 19

## மோ.சைக்கிள் விபத்தில் மதகுரு உயிரிழப்பு

### அரியாலை முள்ளிப் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
அரியாலை முள்ளிப்பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மதகுரு ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இவ்வாறு உயிரி 19

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இராமநாதன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்

**பேருந்து, வான், சிறியவகை காவுவண்டி (Mini Truck) போன்ற வாகனங்களை கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல்.**

1. தவிசாளர், கொள்வனவுக் குழு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களால் அலுவலக மற்றும் கல்விசார் செயற்பாடுகளை செவ்வனே நிறைவேற்றுவதற்காக பின்வரும் வாகனங்களை அழைப்பின் பேரில் (on call/ hiring) அல்லது வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக தகுதிவாய்ந்த கம்பனிகள் அல்லது தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ.இல | வாகனங்களின் வகை | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவையான வாகனங்கள் |
|---|---|---|---|
| 1.1 | பிரயாணிகள் வான், /Passenger Van | 14-16 | 04 |
| 1.2 | பிரயாணிகள் வான், /Passenger Van | 08-10 | 03 |
| 1.3 | பிரயாணிகள் பேருந்து /Passenger Bus | 42-54 | 05 |
| 1.4 | சிறியவகை காவுவண்டி /Mini Truck | 02 | 02 |

2. விண்ணப்பிக்க தகுதியுடைய கம்பனிகள் மற்றும் தனிநபர்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக கேள்வி விண்ணப்பங்களை நவம்பர் 25ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

3. சேவை ஒப்பந்தக்காலம் ஒரு (01) வருடத்தினையும் செயற்றிறன் மதிப்பீட்டுக்காலம் அறுபது (60) நாட்களையும் கொண்டிருக்கும்.

4. நிறுவனம் அல்லது தனிநபர் பின்வரும் அடிப்படைத் தகைமைகளை கொண்டிருத்தல் அவசியமானது.
   - பதிவு செய்யப்பட்ட கம்பனியாக அல்லது இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
   - தகுதியுடைய விண்ணப்பதாரிகளின் வாகனம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.
   - குறைந்தது 03 வருடங்கள் வாடகை வாகன சேவையை வழங்கிய அனுபவம் உள்ள நிறுவனமாக அல்லது தனிநபராக இருத்தல் வேண்டும்.
   - வருடாந்த வருமானம் கடந்த மூன்று வருடங்களில் குறைந்தது ரூபாய். ஒரு மில்லியனாக (Rs. 1000 000 ) (Rs. One Million) இருத்தல் வேண்டும்.
   - ஐந்து வருட அனுபவமுள்ள நற்பண்புடைய சாரதிகள கடமைக்கு அமர்த்தப்படல் வேண்டும்.

5. கேள்வி விண்ணப்பங்கள் யாவும் தொழில்நுட்பத் தேவைகள் மற்றும் வணிகத் தேவைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும். அவற்றிற்கான உரிய சான்று ஆவணங்களை விண்ணப்பத்தில் இணைத்தலும் வேண்டும்.

6. முழுமையான கேள்விப் பத்திரத்தை தமிழ் மொழியில் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு சேவைக் கட்டண வைப்புப் பணமாக ரூபா 2000.00 இனை நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் மக்கள் வங்கிக் கணக்கிலக்கம் 162100160000880 இற்கு வைப்புச் செய்தல் வேண்டும். அல்லது பல்கலைக்கழக காசாளரிடம் கருமபீடத்தில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து பிரதிப் பதிவாளர் பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் மூலப்பிரதியையும் (original) மற்றும் பாதுகாப்பு சேவைக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். பாதுகாப்புச் சேவைக் கட்டண வைப்புப் பணப் பற்றுச்சீட்டு இணைக்கப்படாத விண்ணப்பங்களும் முழுமையாக நிரப்பப்படாத கேள்வி விண்ணப்பங்களும் மற்றும் காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தின் மூலப்பிரதி (Original), பிரதி (Duplicate) என்று தனித்தனியாகப் பொதியிட்டு அக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வகைக்குரிய வாகனங்களின் வகை தனித்தனியே "அழைப்பின் பெயரில் (On Call) / வாடகை (Hiring) அடிப்படையில் வாகனம் வழங்குதல்" எனத் தலைப்பிட்டு தவிசாளர், கேள்விச் சபை, யாழுப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடம் 25.11.2020ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் தனித்தனியாக சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது தவிசாளர், கேள்விச்சபை, த.பெ.இல - 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் 25.11.21020ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

8. கேள்வி மனுவிற்கான பாதுகாப்பு (Bid security) வைப்புப் பணமாக ரூபா 15000.00 இனை இலங்கை மத்திய வங்கியால் அனுமதி வழங்கப்பட்ட யாதேனும் ஒரு வணிக வங்கியிடமிருந்து பெற்றுக்கொண்ட 25.03.2021ஆம் திகதி வரை செல்லுபடியாகும் (120 நாட்கள்) காலத்தை உடைய பாதுகாப்பு வைப்புச் சான்றிதழ்ஒன்றை இணைத்தல் அவசியமானது. மாறாக காப்புறுதி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனைக் குறித்துக் கொள்ளவும்.

**மேலதிக தகவல்களுக்கு:**

**பிரதிப் பதிவாளர்/ பொது நிர்வாகக் கிளை**

**Tele: 021 222 6517, Fax : 021 222 6517.**

**தவிசாளர்,**
**கேள்விச் சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(C-630)

## கண்ணீர் அஞ்சலி



(4542)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி கற்கை நெறியைத் தொடரும் திருமதி **அ. லீலாவதி** அவர்களின் அன்புக் கணவர்

**அமரர்**
### கனகசபை அருளையா

அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சைவ சித்தாந்த முதுகலைமாணி மாணவர்கள்,**
**உயர் பட்டப் படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்த முதுகலைமாணி கற்கை நெறியின் இணைப்பாளரும் சைவ சித்தாந்தத் துறைத் தலைவரும் இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளரும் ஆகிய கலாநிதி **விக்னேஸ்வரி பவநேசன்** அவர்களின் பாசமிகு மாமியார்.



(4545)

**அமரர்**
### மாணிக்கவாசகர் விசாலாட்சி

அவர்கள் அமரத்துவமடைந்த செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சைவ சித்தாந்த முதுகலைமாணி மாணவர்கள்,**
**உயர் பட்டப் படிப்புக்கள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## நன்றி நவிலலும், அந்தியேட்டி கிரியை அழைப்பும்

தோற்றம் 23 . 11 . 1952



மறைவு 08 . 10 . 2020

**அமரர்**
### வேலுப்பிள்ளை கந்தசாமித்துரை
(கட்டித்துரை)

கடந்த 08.10.2020 இல் காலமாகிய எங்கள் குடும்பத் தலைவர் வேலுப்பிள்ளை கந்தசாமித்துரை அவர்களின் மரணச் செய்தி அறிந்து அவரது ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு துயரைப் பகிர்ந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மேலும் தொடர்பாடல் மூலமாக தங்கள் அனுதாபங்களையும் உணர்வினையும் வெளிப்படுத்தி நின்ற உள்ளூர், புலம்பெயர் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு சனிக்கிழமை ( 07.11.2020 ) அன்று வல்வெட்டித்துறை, ஊறணி மடத்தில் அதிகாலை 5.00 மணியளவில் அந்தியேட்டிக் கிரியையும் தொடர்ந்து அன்னாரின் ( தற்போதய ) காட்டுப்புல இல்லத்தில் வீட்டுச் சபீண்டிகரணம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளும் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-620)

ஊறணி,
வல்வெட்டித்துறை.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கொரோனா தொடர்பில் சரியான தகவலில்லை



(கொழும்பு)

அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் ஜனாதிபதியிடத்தில் பெருமளவான அதிகாரங்கள் உள்ளன. அதேபோன்று அரசாங்கத்திற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளது.

இத்தகைய மிகவும் பலம் வாய்ந்த சக்தியை எதிர்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி உள்ளடங்கலாக நாமனைவரும் ஒரே அரங்கில் ஒன்றிணைவது அவசியமாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக்காரியாலயமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் கொரோனா வைரஸ் தீவிரமாகப் பரவிவரும் நிலையில், சுகாதாரப்பிரிவினர் ஒரு விதமாகவும் பாதுகாப்புப்பிரிவினர் வேறொரு விதமாகவும் கருத்துக்களைக் கூறிவருகின்றனர். வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களை கட்டாயமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்த வேண்டும் என்று இராணுவத்தினர் கூறுகின்றனர்.

எனினும் ஒருவாரத்தில் எவ்வித அறிகுறிகளும் தென்படாவிட்டால் அவர்களை வீடுகளுக்கே அனுப்பி வைக்க முடியும் என சுகாதாரப்பிரிவினர் கூறுகின்றனர்.

இவற்றில் எதனை நம்புவது என்று தெரியவில்லை. எனவே இவ்விடயத்தில் அரசாங்கம் தலையிட்டு சரியான நடைமுறையை மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியமாகும் எனத் தெரிவித்தார். (ஐ-4)

## வெட்டுக்காயங்களுடன் ஐவர் வைத்தியசாலையில்

(கண்டி)

கண்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தெய்யன்வெல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இரு சாராருக்கு இடையே ஏற்பட்ட மோதலில் வெட்டுக்காயங்களுடன் ஐவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களில் தந்தை, மகன் ஆகியோர் உள்ளடங்குகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

## யானைகள் நடமாட்டம் அச்சத்தில் மக்கள்



(குருமன்காடு)

வவுனியா, புளியங்குளம், நெடுங்கேணி வீதியில் புளியங்குளம் சந்தியில் இருந்து சுமார் 600 மீற்றர் தூரத்தில் வீதிக்கு வந்த யானையால் பயணிகள் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

நேற்று மதியம் ஒரு மணியளவில் குறித்த யானை வீதிக்கு வந்து சில மணிநேரம் அப்பகுதியில் நடமாடியது.

இதனால் அவ் வீதி வழியாக போக்குவரத்து செய்த பயணிகள், வாகன சாரதிகள் எனப் பலரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகினர்.

அவ்வப்போது மாலை வேளைகளில் குறித்த வீதிக்கு யானை வருவதால் மக்கள் அச்சத்துடனேயே பயணிக்க வேண்டியுள்ளதுடன், தற்போது மதிய வேளைகளிலும் வீதிக்கு வரத் தொடங்கியுள்ளது.

இதேவேளை, குறித்த பகுதிக்கு வரும் காட்டு யானைகளைக்கட்டுப்படுத்த மின்சார வேலி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பயணிகளும் அப்பகுதி மக்களும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (5-4-250)

## பசில் பாராளுமன்றம் வரலாம் இராதாகிருஷ்ணன் ஆதரவு

(நுவரெலியா)

பசில் ராஜபக்ஷ பாராளுமன்றம் வருவதை நான் ஆட்சேபிக்கவில்லை. சிறப்பாக சேவையாற்றக்கூடிய அவர் சபைக்கு வந்தால் அனைவருக்கும் சேவைகளை வழங்குவார் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் நேற்று நுவரெலியாவில் வைத்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இரட்டைக்குடியுரிமை கொண்டவர்கள் பாராளுமன்றம் வருவதற்கான தடை 20 ஆவது திருத்தச்சட்டம் ஊடாக நீக்கப்பட்டுள்ளது. பசிலுக்காகவே இந்த சரத்து உள்வாங்கப்பட்டது. பசில் தேர்தலில் போட்டியிடவில்லை. தேசியப்பட்டியலிலும் இடம்பெறவில்லை.



எனவே, அவர் பாராளுமன்றம் வருவதற்கு சட்டரீதியாக பிரச்சினை உள்ளது என அறியமுடிகின்றது. அதனை நிவர்த்தி செய்துகொண்டு அவர் வரலாம். அவ்வாறு வந்தால் அதற்கு நாம் ஆட்சேபனை வெளியிடப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## சுற்றுலாத்துறையை மேம்படுத்த குழுவொன்று நியமனம்

(கொழும்பு)

நாட்டில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த 11 உறுப்பினர்களை கொண்ட ஆலோசனைக்குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் 2005 ஆம் ஆண்டின் பிரிவு 38 (பிரிவு 32) இன் சுற்றுலா சட்டத்தின் கீழ் 11 பேர் கொண்ட இவ் ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்களாக ஜெட்விங் சிம்பொனி தலைவர் ஹிரான் கூரே, கன்னைசன்ஸ் டி சிலான் தலைவர் சந்திர விக்ரமசிங்க, ஷங்ரிலா ஹோட்டல் கொழும்பு துணைத் தலைவர் திமோதி ரைட், சாந்தனி வெல்னஸ் ரிசார்ட் நிறுவுனர் விக்கம் நவகமுவ, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி விபுலா கிராடில்லே, முன்னாள் தலைவரும் செயற்குழு உறுப்பினருமான சி.எச்.எஸ்.ஜி.ஏ ட்ரெவின் கோம்ஸ், டெய்லி எஃப்டி எடிட்டரும் தலைமை நிர்வாக அதிகாரியுமான நிஸ்தர் காசிம், எக்ஸ்பீடியா பகுதி மேலாளர் சவி கோதகண்ட எமார்க்கெட்டிங் தலைமை நிர்வாக அதிகாரி ரஜித தஹநாயக்க, ரஞ்சித் டி சில்வா (செயலாளர்) மற்றும் நிமேஷ் ஹேரத் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ் ஆலோசனைக் குழுவின் உதவியுடன், தொழில் துறையை புதுப்பிக்க அமைச்சின் கீழ் உள்ள அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தவும், சுற்றுலாத் துறைக்கான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் உதவியை அடையவும் ரணதுங்க உறுதியளித்துள்ளார்.

இலங்கையை ஒரு சுற்றுலாத் தளமாக நிலைநிறுத்துவதற்கும், சுற்றுலாத் தளங்களை வளர்ப்பதற்கும் முறையான பிரசாரத்தின் முக்கியத்துவத்தை இதன் மூலம் வலியுறுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## தொழில்நுட்பக் குழுவிலிருந்து விலகத் தீர்மானம் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் தொழில்நுட்ப குழுவில் இருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நாங்கள் அறிந்த வகையில் சமூகத்திற்குள் அதிகளவு தொற்று பரவியுள்ளது. தொடர்ந்தும் எமக்கு பி.சி.ஆர். பரிசோதனை தொடர்பில் பாரிய பிரச்சினை காணப்படுகின்றது.

பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்வதில் காணப்படும் பற்றாக்குறை முதலாவது பிரச்சினையாக காணப்படுகின்றது. இந்த பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக பரிசோதனையின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என நாங்கள் நம்புகின்றோம். ஜீபிஎஸ் ஊடாக அவ்வாறு இல்லாவிடின் நாட்டில் தொற்றுக்குள்ளானவர்களை இனங்காண முடியாது போகும். இதனை நாங்கள் ஆரம்பத்திலிருந்து தெரிவித்து வருகின்றோம். அது இன்னமும் இடம்பெறவில்லை.

நேற்று முன்தினமும் நாங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து கலந்துரையாடினோம். இதனை தொடர்ந்தும் முன்னெடுக்காவிடின் தொழில்நுட்ப முறையை பின்பற்றக்கூடிய நடைமுறையை இவர்கள் எதிர்காலத்தில் தொடர்வார்களா? என்பது தெரியவில்லை. எனவே சுகாதார அமைச்சின் தொழில்நுட்பக் குழு செயற்பாடுகளில் பங்கேற்பதை நிறுத்துவதற்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது. ஜீபிஎஸ்ஸை செயற்படுத்துவதற்கான ஒரு பொறிமுறையை இந்த வாரத்திற்குள் முன்வைக்காவிடின் நாங்கள் உறுதியான தீர்மானத்தை எட்ட வேண்டி ஏற்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இயக்குநர், வைத்தியர் ஹரித அளுத்கே குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மாவட்டங்களை பாதுகாப்பதற்கு மாவட்ட செயலாளர்களுக்கு அதிகாரம்

**(கொழும்பு)**

**கொரோனாத் தொற்று நாடு முழுவதும் பரவுவதை கட்டுப்படுத்தி, தத்தமது மாவட்டங்களை பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ளக்கூடிய உச்ச நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பொருளாதார நிலை மற்றும் மக்களின் வாழ்க்கையை தொடர்ந்து சிறந்த நிலையில் பேணுவதற்கும் தேவையான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்படும் என பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்பிற்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.**



அலரிமாளிகையில் இரு தினங்கள் இடம்பெற்ற கலந்துரையாடல்களில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உலகின் பிரதானமான நாடுகள் கொரோனாவால் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ள சந்தர்ப்பத்திலும் கூட நம் நாட்டில் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்படாது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து பொருளாதார இலக்குகளை நிறைவேற்றிக் கொண்டு தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான தீர்மானங்களை மேற்கொண்டு வருவதாக வெளிப்படையாகத் தெரிவித்தார்.

அந்தந்த மாவட்டங்களின் தற்போதைய நிலைக்கு மத்தியில் ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதுடன் விசேடமாக விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பாதுகாக்கப்படும் வகையில் விவசாயத்துறையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் விவசாயத் துறைக்கு மேலதிகமாக மாவட்ட மட்டத்தில் சுகாதாரம், போக்குவரத்து, கடற்றொழில், தொழிற்சாலை நடவடிக்கைகளை மேற் கொள்ளல், நீர் மற்றும் மின்சார விநியோகம், கழிவு முகாமைத்துவம், எரிபொருள் வழங்கல் ஆகிய அத்தியாவசிய செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் ஊடாக தரம் உறுதி செய்யப்பட்ட மீன்களை மக்களுக்கு விநியோகித்தல் தொடர்பிலும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் சமுர்த்திப்பயனாளர்களுக்கு இம்முறை சமுர்த்திக் கொடுப்பனவில் ரூபாய் 500 மதிப்புள்ள ஏற்றுமதி தரத்திலான பொதி செய்யப்பட்ட மீன்களை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் தலையீட்டுடன் பெற்றுக் கொடுப்பதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. (ஜ-4)

## குருகுலம் தொலைக்காட்சி நிகழ்ச்சி நேர அட்டவணை-தமிழ் மொழி மூலம்
## வடமாகாண கல்வி திணைக்களம் - வடக்கு மாகாணம்

| நேரம் | 05.11.2020 | 06.11.2020 | 07.11.2020 | 08.11.2020 |
|---|---|---|---|---|
| 04.00-05.00 | | A/L கணக்கியல்-L 33 | | A/L வணிகம் - L 21 |
| 05.00-06.00 | A/L பௌதீகவியல்-L 42 | | A/L இரசாயனவியல் - L 42 | |
| 06.00-07.00 | | O/L விஞ்ஞானம்-L 24 | | A/L புவியியல் - L 34 |
| 08.00-09.00 | | A/L BST -L 08 | A/L தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் - L 42 | |
| 09.00-10.00 | A/L தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் -L 08 | | | O/L ஆங்கிலம் - L 74, L 75 |
| 10.00-11.00 | | A/L பொருளியில் -L 27 | A/L இணைந்த கணிதம் -L 57 | |
| 11.00-12.00 | A/L இணைந்த கணிதம் -L 17 | | | A/L பொறியியல் தொழில்நுட்பம் -L 41 |
| 12.00-13.00 | | A/L பௌதீகவியல் -L 43 | A/L அரசியல் விஞ்ஞானம் -L 41 | |
| 13.00-14.00 | A/L உயிரியல் - L 40 | | | A/L பொருளியல் - L 55 |
| 14.00-15.00 | | A/L வணிகம் -L 20 | A/L விவசாய விஞ்ஞானம் -L 38 | |
| 15.00-16.00 | | A/L உயிரியல் -L 55 | | |
| 16.00-17.00 | A/L கணக்கியல் - L 57 | | O/L கணிதம் Live | O/L வரலாறு Live |
| 17.00-18.00 | Gr-5 மொழி - (SLRC) | Gr5 கணிதம் -(SLRC) | | |
| 18.00-19.00 | | கணிதம் -31 ERA -30 | | |
| 22.00-23.00 | | A/L இணைந்த கணிதம்-L 18 | | A/L உயிர் அமைப்பு தொழில்நுட்பம் -L 40 |
| 23.00-24.00 | A/L இரசாயனவியல் - L 41 | | A/L தமிழ்- L 49 | |

# கடலுக்கடியில் பிளாஸ்ரிக் அகற்றும் நடவடிக்கை



(கொழும்பு)

திருகோணமலை கடற் பிராந்தியத்தில் கடலுக்கடியில் காணப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளை அகற்றும் திட்டம் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டது.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் பாவனை காரணமாக கடலில் ஏற்பட்டுள்ள இம் மாசு பொருட்களை அகற்றும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் குப்பைகள் பாரமற்றவையாக இருப்பதால், அவை கடலோரத்தில் பரவி சிக்கிக் கொள்கின்றன.

கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் கடற்பறவைகள் என்பவற்றின் சமிபாட்டுத் தொகுதியில் பிளாஸ்ரிக் பொருட்கள் சிக்கிக்கொள்வதனால் அவை பெரும்பாலும் உயிரிழக்கின்றன.

எதிர்கால சுற்றுச்சூழல் பேரழிவை மனதில் இருந்தி, கடலோரப் பகுதியின் தூய்மையை உறுதிப்படுத்துவதற்கும் நாட்டைச் சூழவுள்ள கரையோரங்களின் தூய்மையை பேணவும், கடல் சுற்றுச்சூழல் மற்றும் அதன் உயிரியல் பல்வகைமைகளுக்கு தீங்கு விளைவிப்பதை தடுக்கவும் இவ்வகையான திட்டங்கள் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாடசாலை போக்குவரத்து வான் உரிமையாளர்களுக்கு மீண்டும் லீசிங் சலுகை

(கொழும்பு)

பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வான் உரிமையாளர்களுக்கு மீண்டும் லீசிங் சலுகை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

கொரோனா தொற்று அச்ச நிலைமை காரணமாக தற்போது பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வான் உரிமையாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன், தற்போதைய நிலைமையின் அடிப்படையில் பாடசாலை வான்களுக்கான கட்டணங்களை பெற்றோரிடம் முழுமையாக அறவிட முடியாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வான் உரிமையாளர்கள் எதிர்நோக்கியுள்ள சிக்கல்கள் குறித்து ஆராயப்பட்டு, மீண்டும் லீசிங் சலுகை வழங்குவது தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# கிரான்ட்பாஸ் அடுக்குமாடி குடியிருப்பில் 16 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

(கொழும்பு)

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் அமைந்துள்ள அடுக்குமாடி வளாகத்தில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 16 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள சுமார் 30 வீடுகள் சுகாதாரப் பிரிவினரால் மூடப்பட்டுள்ளன.

வீடமைப்பு வளாகத்தில் வசிக்கும் அனைவரையும் தங்களின் வீடுகளுக்குள்ளே தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2161

### தினேஷ்

மூளை இருக்கிறவனுக்குத்தான் மூளைக் காய்ச்சல் வருமாம்



நல்ல வேளை நானும் என் பிரண்டும் தப்பிச்சோம்..!

### கண்மணி

குடிப்பியா என்னு கேட்ட அல்லது ஒன்னு ஆமா என்னு சொல்லனும் / இல்லைன்னு சொல்லனும்



அதென்ன பீர் மட்டும் தான் என்று சொல்லறது "பீர்" என்ன பஞ்சாமிர்தமா

### மகேஷ்

நாமெல்லாம் 2020 இல் தான் இருக்கிறோம்...



அனா இவங்க 3020 க்கே போயிட்டாங்க...!

### அகிலா

புகைப்படம் எடுக்கும் போதுமட்டும் புன்னகை என்றாகி விட்டது சிலரது வாழ்க்கை



### கதிர்

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்



மனைவி அமைதியாக இருப்பதெல்லாம் இறைவனுக்கே கிடைக்காத வரம்..!

### நிரஞ்சனா

இத்தனை வருசமா சலிக்காதது ஒன்னு இருக்கு என்றால் அது சோறு மட்டும் தான்...!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# யாழ்.நகரப் பகுதி கடைகள் மீளத்திறக்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன சந்தைக் கட்டடத் தொகுதியில் கொரோனாத் தொற்றால் மூடப்பட்டிருந்த கடைகள் நேற்றைய தினம் திறக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து வந்த தந்து கொரோனா தொற்றுக்கு உள்ளானவரின் உறவினர்களின் நான்கு கடைகள் யாழ்ப்பாண சுகாதார வைத்திய அதிகாரியினால் மூடப்பட்டிருந்த நிலையில் குறித்த கடை உரிமையாளர்களுக்கு முதலாவது பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்பதன் அடிப்படையில் குறித்த கடைகளைத் திறப்பதற்கு சுகாதாரப் பகுதியினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதன் அடிப்படையில் நேற்றுக் குறித்த கடைகள் அனைத்தும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு திறக்கப்பட்டன.

யாழ்.மாநகர முதல்வர், யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரி, யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, யாழ்.வணிகர் கழக தலைவர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் மூடப்பட்டிருந்த கடைகள் அனைத்தும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்ட பின்னர் திறக்கப்பட்டன.

குறித்த கடைகளில் பணியாற்றுபவர்களுக்கு விழிப்புணர்வு செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது. (5-4-33-18)

# மருதனார்மடம் சந்தை விவகாரம்; மணிவண்ணன் நேரில் சென்று ஆராய்வு



(குப்பிழான்)

மருதனார்மடம் பொதுச் சந்தையின் புதிய சந்தைக் கட்டடத் தொகுதியில் நிலவும் இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை தொடர்பில் யாழ்.மாநகரசபை உறுப்பினரும் சட்டத்தரணியுமாகிய விஸ்வலிங்கம் மணிவண்ணன் உள்ளிட்ட குழுவினர் மேற்படி சந்தைக்குச் சென்று தற்போதைய நிலைமைகளை ஆராய்ந்தனர்.

நேற்றுப் புதன்கிழமை காலை மருதனார்மடம் சந்தைக்குத் திடீர் விஜயம் மேற்கொண்ட விஸ்வலிங்கம் மணிவண்ணன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வலி.தெற்குப் பிரதேச சபை உறுப்பினர் சி.லகிந்தன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன், தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மானிப்பாய் பிரதேச அமைப்பாளர் ஜெ.வீரா ஆகியோர் குறித்த சந்தைக்கு நேரடியாகச் சென்று வியாபாரிகளின் பிரச்சினைகள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, மருதனார்மடம் பொதுச் சந்தையில் நிலவும் புதிய சந்தைக் கட்டடத் தொகுதிக்கான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக வலி.தெற்குப் பிரதேச சபையின் விசேட கூட்டம் இன்று நடைபெறும். (5-4-18)

# விழிப்புணர்வு நிகழ்வும் முகக்கவசம் வழங்கலும்

(சாவகச்சேரி)

முகக் கவசமே முக்கியம்" எனும் தொனிப்பொருளில் இன்று 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் சாவகச்சேரி பொதுச் சந்தையில் விழிப்புணர்வு நிகழ்வும், இலவசமாக முகக் கவசம் வழங்கும் நிகழ்வும் இடம்பெற இருப்பதாக நகரசபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தளிர்ராஜ் தெரிவித்துள்ளார்.

லயன்ஸ் கழகம் ,சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பொலிஸார் மற்றும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியன இணைந்து இச் செயற்பாட்டினை முன்னெடுக்கவுள்ளனர். இதன் போது அனைத்து வியாபாரிகள் மற்றும் சந்தைக்கு வரும் பொதுமக்கள் அனைவருக்கும் இலவசமாக முகக்கவசம் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-4-30)

# கழிவகற்றல் தொடர்பில் துண்டுப்பிரசுரம் விநியோகம்

(சாவகச்சேரி)

கழிவகற்றல் தொடர்பில் சாவகச்சேரி நகர சபையினர் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக துண்டுப் பிரசுரங்களை நகர சபை உறுப்பினர்கள் ஊடாக வழங்கி வருகின்றனர்.

அதில் பொதுமக்கள் கழிவுப் பொருட்களை உக்கும், உக்காத கழிவுகளாக தரம் பிரித்து வழங்க வேண்டும்.

தரம் பிரித்து வழங்காத கழிவுகளை நகராட்சி மன்றத்தின் கழிவகற்றும் வாகனம் ஏற்றிக் கொள்ளாது.

பெருமளவான விவசாயக் கழிவுகள் மற்றும் மரக் கிளைகள் போன்றவற்றை நகரசபையுடன் தொடர்பு கொண்டு கட்டணம் செலுத்திய பின்னரே அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறியளவிலான கழிவுகளை கழிவு அகற்றும் உழவு இயந்திரத்தில் ஏற்றக்கூடியவாறு சிறு துண்டுகளாக வெட்டி வைத்தல் வேண்டும்.

வட்டாரங்களுக்கு கழிவகற்றும் வாகனம் வரும் நாட்களில் மாத்திரமே கழிவுப் பொருட்களை வீதியோரத்தில் வைக்க முடியும்.

பம்பஸ் போன்ற கழிவுகளை பாதுகாப்பாக சேகரித்து கழிவகற்றும் வாகனம் வரும் வேளையில் நேரடியாக வழங்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான நகர சபையின் ஒழுங்கு விதிமுறைகளுக்கு இணங்காதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவித்துள்ளனர். (5-4-30)

# தடைகளை மீறி ஒன்றுகூடும் கழகங்களுக்கு ஒருவருடத் தடை

(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களில் சில கழகங்கள் மைதானத்தில் விளையாட்டு பயிற்சியில் ஈடுபடுவதாக பிரதேச செயலாளருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் விளையாட்டு உத்தியோகத்தர் நேற்று முன்தினம் அதிரடியாக களத்தில் இறங்கிய போது விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த கரவெட்டி பிரதேச செயலாளர் தற்போதைய கொவிட்-19 வைரஸ் தொற்று காலத்தில் அனைத்துக் கழகங்களும் சமூக பொறுப்பு உணர்ந்து செயற்படுமாறும் மைதானங்களில் ஒன்று கூடுவதை தவிர்ப்பதற்கான சுவரொட்டிகளை மைதானங்களிலும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அனைத்து விளையாட்டுக் கழகத்தினரையும் கேட்டுக்கொண்டார். இதனையும் மீறி எதிர்காலத்தில் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவது உறுதிப்படுத்தப்பட்டால் கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் என்பதுடன் கழகத்திற்கு ஒரு வருட காலத்திற்கு விளையாடத் தடை விதிக்கப்படலாம் என்றும் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கைகளை கண்காணிக்க கிராம மட்ட அலுவலர்களுடன் பொலிஸார், இராணுவத்தினர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (5-4-60)



யாழ். நகர லியோக் கழகம் மற்றும் யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கோப்பாய் பொலிஸாரின் ஆதரவுடன் கொரோனா விழிப்புணர்வுப் பிரசாரம் திருநெல்வேலியில் நேற்று நடைபெற்றது.

யாழ்.நகர லியோ கழகத்தின் தலைவர் லியோ ஜனுசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு லியோ கழக அங்கத்தவர்கள், யாழ். நகர லயன்ஸ் கழகத்தின் அங்கத்தவர்கள், பொலிஸார்,நல்லூர் பிரதேசசபை உறுப்பினர் மதுசூதன் ஆகியோர் பங்கெடுத்தனர்.



(படம்:-சுபேசன்)

"பசுமை நிழல்கள்" அமைப்பினரின் ஏற்பாட்டில் சாவகச்சேரி நகர்ப் பகுதியில் பயன் தரு மரக் கன்றுகள் நாட்டப் பட்டுவருகின்றன.


# வீதி மூடப்படும்

வீதி அகலிப்பு வேலைகளுக்காக (காப்பெற் இடுவதற்கு) இன்று 5 ஆம் திகதியும், நாளை 6 ஆம் திகதியும் கொக்குவில் வட்டுக்கோட்டை வீதியில் ஆனைக்கோட்டைச் சந்தியிலிருந்து வட்டுக்கோட்டைச் சந்திவரையான வீதி மூடப்படும்.

இவ் விரு நாட்களும் சகல மக்களும் மாற்று வீதியைப் பயன்படுத்துமாறு, யாழ்ப்பாணம் வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர் அறிவித்துள்ளார். (5)

# பதவியில் நீடிக்கும் எண்ணமில்லை

## விடாப்பிடியில் தேசப்பிரிய



**(கொழும்பு) முன்னர் அறிவிக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் அழைப்பு விடுத்தாலும் தொடர்ந்தும் நீடிக்கும் எண்ணமில்லை என மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.**

அந்தப் பதவியைப் பூர்த்தி செய்யவுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய உட்பட ஏனைய உறுப்பினர்களான பேராசிரியர் ரட்ண ஜீவன் ஹூல், பேராசிரியர் நளின் அபேசேகர ஆகியோர் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் பதவிக்காலம் எதிர்வரும் 12 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ள நிலையில் அடுத்த கட்டம் தொடர்பில் வினவிய போது அதற்குப் பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் பதவியில் தற்போதைய பதவிக்காலம் நிறைவடைந்த பின்னர் தொடரப் போவதில்லை என்று முன்னதாகவே அறிவித்திருந்தேன்.

எனவே அந்த முடிவில் எவ்விதமான மாற்றங்களும் இல்லை. திணைக்களத்தில் எனது அலுவலக அறையினை ஒப்படைப்பதற்குரிய உரிய செயற்பாடுகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளேன். ஆவணங்களை ஒழுங்குபடுத்தல் உள்ளிட்ட பணிகளை தற்போது முன்னெடுத்துள்ளேன் என தெரிவித்தார். (ஐ-4)

# கொழும்பில் பலரையும் வியப்பில் ஆழ்த்திய முட்டை வியாபாரி



(கொழும்பு) நாட்டில் கொரோனா வைரஸ் தீவிரம் அடைந்துள்ள நிலையில், மேல் மாகாணத்தில் முழுமையான தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொழும்பில் சுகாதார பாதுகாப்பு முறைகளைப் பின்பற்றி மோட்டார் சைக்கிளில் முட்டை விற்பனை செய்யும் வியாபாரி தொடர்பில் சமூக வலைத்தளங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

அவர் தனது முட்டைக்காக பயனாளர்களிடம் பணம் பெற்றுக் கொள்ளும் போது ஒன்றரை மீற்றர் தூரத்தை கடைப்பிடிக்கும் வகையில் பிளாஸ்ரிக் கூடைகள் இரண்டினை ஒன்றிணைத்து கம்பி ஒன்றை பயன்படுத்தி பெற்றுக் கொள்கின்றார்.

மிகவும் சுகாதார பாதுகாப்புடன் முட்டை விற்பனையில் ஈடுபடும் குறித்த முட்டை வியாபாரிக்கு சமூக வலைத்தளங்களில் பலரும் பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர். (ஐ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: செவ் 3 இல் உயரம்: 6'<br>தகைமை/தொழில்: B.Eng Civil Engineering Engineer (London)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் வெளிநாடு செல்லக் கூடியவர்<br>தொ.இ: B/11354 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 9 சூரி,செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி தகுந்த மணமகன்<br>தொ.இ: G/11374 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: செவ் 4 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. பல்பொருள் வாணிபம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11355 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 2<br>கி.பா: 92 ¼ செவ் 12 இல்<br>உயரம்: 147cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி அரச, தனியார் உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11379 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 10செவ் 6 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி விரிவுரையாளர்<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11356 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா:72செவ் 10 இல்உயரம்: 153cm<br>தகைமை/தொழில்: பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/11385 |
| பிறப்பு: 1990 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: செவ் 2 இல் உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: பட்டதாரிஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11357 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. தனியார் நிறுவனத்தில் வேலை<br>எதிர்பார்ப்பு: வேலை உள்ள மணமகன்<br>தொ.இ: G/11387 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


# நிவாரண செலவுகளுக்காக 7.3 பில்லியன் ரூபா நிதி

(கொழும்பு) நாட்டில் கொரோனாத் தொற்று பரவலை தடுப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் போது, பொதுமக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக்கொடுப்பதற்காக அரசாங்கத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, நிவாரண செலவுகளுக்காக அரசாங்கத்தினால் 7.3 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், மினுவாங்கொட கொத்தணிஊடாக நாட்டில்மீண்டும்கொரோனா தொற்று பரவலடைவதைத் தொடர்ந்து, இதனால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கே இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் கோரிக்கைகளுக்கு அமைவாக மேலதிக நிதியை ஒதுக்கீடு செய்ய தயாராகவுள்ளதாகவும் திறைசேரி குறிப்பிட்டுள்ளது. (ஐ-4)

# இடைநிறுத்தம்

(கொழும்பு) மேல்மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

கொரோனாத் தொற்றுப் பரவலை அடுத்து, மேல்மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், மேல்மாகாணத்தில் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு மற்றும் அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதை தொடர்ந்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, மறு அறிவித்தல்வரை மேல்மாகாணத்தில் வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, www.motortraffic.wp.gov.lk என்ற இணையத்தளத்தின் ஊடாக வாகன வருமான அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# வியாபாரமின்றி காணப்படும் மீன் சந்தைகள்

(குருமன்காடு)

கொவிட் -19 அச்சம் காரணமாக வவுனியாவில் மீன் விற்பனை வீழ்ச்சியடைந்துள்ளது.


பேலியகோட மீன் சந்தையில் கொவிட் - 19 கொத்தணியில் கொரோனாத் தொற்றாளர்களாக 4 ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் நாடு தற்போது மிக அபாயகரமான சூழ்நிலையில் காணப்படுகிறது.

இந்நிலையில் பேலியகொட மீன் சந்தையுடன் தொடர்புடைய நபர்கள் வடமாகாணம் உட்பட நாடு முழுவதும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மீன் தொடர்பில் மக்கள் பாரிய அச்சத்தில் உள்ளனர்.

இதன் காரணமாக வவுனியா மாவட்டத்திற்கு யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பகுதிகளிலிருந்து வருகின்ற மீன் வகைகளின் விற்பனை வீழ்ச்சி நிலையில் காணப்படுகிறது.

குறிப்பாக வவுனியா மாவட்டத்தில் மக்கள் மீன்களை பெரியளவில் கொள்வனவு செய்யவில்லை என்பதுடன், பலரும் தொழில் வாய்ப்பை இழந்துள்ளனர். வவுனியா நகர மீன் சந்தை, குருமன்காடு மீன் சந்தை, குழுமாட்டுச்சந்தி மீன் சந்தை போன்ற இடங்களில் மீன்கள் விற்பனையின்றிக் காணப்படுகின்றன.

இதன் காரணமாக மக்களின் நடமாட்டமின்றி மீன் சந்தைகள் வெறுச்சோடி காணப்படுவதுடன் வியாபாரிகளும் நட்டமடைந்துள்ளனர். (5-4-250)



# பொதுமக்களின் பங்களிப்புடன் முறியடிக்கப்படும் சட்டவிரோத செயற்பாடுகள்



(முறிகண்டி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பகுதியில் பிரதேச மக்களால் 3 கொள்கலன்களில் கோடா மற்றும் வெற்றுக் கோடா கொள்கலன் ஆகியன அடையாளம் காட்டப்பட்டு பொலிஸாரால் மீட்கப்பட்டன.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட குஞ்சுக்குளம் பகுதியில் இவ்வாறு சட்டவிரோத மது உற்பத்தி இடம் பெறுகின்றமை தொடர்பில் மக்கள் முறைப்பாடு செய்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்திக்கு தயாராக இருந்த நிலையில் 3 கொள்கலன்களில் கோடா மற்றும் வெற்றுக் கொள்கலன் ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், சோலை உள்ளிட்ட கிராமங்களில் சட்டவிரோத மது விற்பனை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் மக்கள் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வந்துள்ளனர். பொலிஸார் நடவடிக்கை எடுக்கின்ற போதிலும் அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்நிலையில் குறித்த பகுதிகளில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடங்களை அடையாளம் கண்டு அதனை அழிப்பதற்கான பணியில் பொதுமக்கள் இறங்கியுள்ளனர். அந்த வகையில் நேற்று முன்தினம் குறித்த பகுதி அடையாளம் காணப்பட்டு பொலிஸாரினால் அழிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி பொலிஸாரின் உதவியுடன் நடவடிக்கை முன்னெடுக்க உள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேபோன்று கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில் இளைஞர்கள் ஒன்றிணைந்து சட்டவிரோத மது விற்பனை மற்றும் உற்பத்தியினை தடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருந்த நிலையில் வன்னேரிக்குளம் பொதுமக்களும் விழிப்படைந்துள்ளனர்.

கிராமங்கள் தோறும் சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் அண்மைக்காலமாக பொதுமக்கள் இணைந்து தடுக்கும் செயற்பாடுகளில் களமிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (5-4-100)

# விதை உழுந்திற்கு தட்டுப்பாடு ஏமாற்றமடையும் விவசாயிகள்

(குருமன்காடு)

வவுனியா பிராந்திய பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனை விதை, நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலையத்தினால் நேற்று முன்தினம் 1000 கிலோகிராம் உழுந்து நியாய விலையில் பயனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. எனினும் பலர் உழுந்து கிடைக்காது ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இலங்கையில் வவுனியா மாவட்டத்திலிலேயே அதிகளவிலான உழுந்து விளைச்சல் காணப்படுகின்றது. நாட்டின் உள்ளூர் விவசாயிகளின் பொருளாதாரத்தினை முன்னேற்றும் நோக்கில் அரசாங்கத்தினால் உழுந்து இறக்குமதி தடை செய்யப்பட்டு உள்ளூரில் உழுந்து உற்பத்தியினை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வவுனியா மாவட்டத்தில் காலபோகத்திற்கான உழுந்து செய்கைக்கான விதை உழுந்து மிகவும் தட்டுப்பாடாக காணப்படுவதாலும் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாலும் விவசாயிகள் உழுந்துச் செய்கையை மேற்கொள்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

எனினும் காலபோகச் செய்கைக்காக பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனை விதைகள் நடுகைப்பொருட்கள் பிரிவினரால் இதுவரை 25 ஆயிரத்து 650 கிலோ விதை உழுந்து விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதன் இறுதி விநியோகமாக நேற்று முன்தினம் 1000 கிலோ விதை உழுந்து விநியோகிக்கப்பட்டது. எனினும் விவசாயிகள் அதிகளவில் காணப்பட்ட போதும் போதியளவு உழுந்து இன்மையால் அனைத்து விவசாயிகளுக்கும் விநியோகிக்க முடியாது போனது.

விதை உழுந்து கிடைக்காமையினால் மிகுந்த மனத்தாக்கத்துடன் விவசாயிகள் பலர் வீடு திரும்பியிருந்தனர். (5-4-285)

# சமுர்த்தி வங்கி செயற்பாடுகள் கணனிமயப்படுத்தப்பட்டன

(பனிக்கன்குளம்)

துணுக்காய் சமுர்த்தி வங்கி செயற்பாடுகள் கணனி மயப்படுத்தல் தேசிய செயற்பாட்டில் தரவுப் பதிவேற்ற வேலைத் திட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து கணனிமயப்படுத்தப்பட்ட வங்கி சேவைகளை மக்கள் மயப்படுத்தும் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று முன்தினம் பிரதேச செயலாளர் ஆ.லதுமீரா தலைமையில் நடைபெற்றது.

வழமையான வங்கி சேவைகளை கணனி மயமாக்கல் ஊடக இலத்திரனியல் புத்தகம் வழங்கி அதனூடாக வங்கிச் சேவைகள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.

இதனூடாக வங்கியின் வழமையான சேவைகளை கணனி மயப்படுத்தலூடாக மக்கள் பெற்றுக் கொள்ள முடியும்.

இந்நிகழ்வில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், மாவட்ட கருத்திட்ட முகாமையாளர், மாவட்ட சமுர்த்தி உள்ளகக் கணக்காய்வாளர்கள், பிரதேச செயலக சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கணனிமயப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் அகில இலங்கை ரீதியாக 1073 வங்கிகளில் 8 ஆவது வங்கியாகவும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இரண்டாவது வங்கியாக சேவைகளை ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-281)



கிளிநொச்சி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் இளைஞர் அமைப்பினால் கிளிநொச்சி நகரின் பல பகுதிகளில் கொரோனா விழிப்புணர்வு துண்டுப்பிரசுரங்களும் முகக்கவசங்களும் வழங்கப்பட்டன. (படம்:- சப்தசங்கரி)



கொரோனாத் தொற்றிலிருந்து விடுபடுவதற்காக கிளிநொச்சி பசுமைப்பூங்கா அருகிலுள்ள மீனாட்சி அம்மன் ஆலயத்தில் நேற்று யாகம் இடம்பெற்றது. இதில் மாவட்ட செயலக ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண் டனர். (படம்:- தேவானந்தன்,சப்தசங்கரி, நிபோஜன்)

# இராசிபலன்

05.11.2020
ஐப்பசி 20, வியாழக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 3.39 மணிவரை
திருவாதிரை பின்னிரவு 4.33 மணிவரை
சுபநேரம் 7.34 - 9.04 மணிவரை
இராகுகாலம் 1.34 - 3.04 மணிவரை
சந்திராஷ்டமம்- கேட்டை

வளவன்


மேஷம்

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.


ரிஷபம்

நிதி நிலை உயரும் நாள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.


மிதுனம்

ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று அமையலாம், போசன சுகமுண்டு.


கடகம்

குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.


சிம்மம்

பொன்னான நாள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கன்னி

அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், செல்வாக்கு மேலோங்கும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.


துலாம்

தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், தடைகள் விலகி தனவரவு பெருகும் நாள், உறவினர் வழியில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், பணப்பற்றாக்குறை ஏற்படலாம், வழிபாடு குதூகலம் தரும்.


தனுசு

குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், வியாபார விருத்தியுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு, போசன சுகமுண்டு.


மகரம்

உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

சுப செய்திகள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.


மீனம்


தூரதேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொழில் ரீதியாக வரவேண்டிய வரவுகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும்.

கப்பலுக்குரிய பிரதேசம் கடல், இதயத்திற்குரிய பிரதேசம் தியானம்.

# உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்திற்குள் தீர்வு

(கொழும்பு)

தமது உற்பத்திகளுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு ஒரு வார காலத்திற்குள் நிவாரணத் தீர்வு வழங்கப்படும் என அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.



இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. கொரோனா தொற்றுக் காரணமாக சில பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தற்காலிகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பொருட்களை உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாததால் தடை அகற்றப்பட வேண்டிய பொருட்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இதற்கான பட்டியல் தயாரிக்கப்படவுள்ளன. கைத்தொழில் அமைச்சு, சுங்கப்பிரிவு, இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை கைத்தொழில் நிறுவகம் என்பவற்றை உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் இந்தப் பட்டியல் தயாரிக்கப்படும்.

இதன் பின்னர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்தப் பொருட்கள் தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டார். (நி-4)

# சவுதி அரேபியாவில் தங்கியுள்ள இலங்கையர்களை 48 மணித்தியாலங்களுக்குள் அழைத்து வர உத்தரவு

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பாதுகாப்பு இல்லங்களில் தங்கியுள்ள இலங்கையர்களை 48 மணித்தியாலங்களுக்குள் அழைத்து வர ஜனாதிபதி உத்தரவின் பேரில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைய நடைபெற்ற சிறப்பு பணிக்குழுவின் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக சவுதி அரேபியாவில் உள்ள இலங்கையர்களின் வதிவிட மற்றும் தொழில் வாய்ப்புக்களுக்கு கடும் பாதிப்பு காணப்படுவதாக தெரியவந்துள்ளது.

அந்நாட்டின் 150 பாதுகாப்பு இல்லங்களில் இவர்கள் தங்கியுள்ளனர். இவர்களை 48 மணித்தியாலங்களுக்குள் நாட்டிற்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்காக ஒரு நாளைக்கு இரண்டு விமான சேவைகளை யேனும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் பணித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# கைத்தொழில் அமைச்சினால் தொலைபேசி இலக்கங்கள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தொழிற்றுறைகளின் பணிகளை செயற்றிறனுடன் முன்கொண்டு செல்வதற்காக தொழிற்றுறையினருக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க கைத்தொழில் அமைச்சினால் மூன்று விசேட இலக்கங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கமைய, 071 397 6406, 011 315 8117 என்ற இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இறக்குமதி வரி தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக அறிவிப்பதற்கு 077 082 0775 என்ற இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்த முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையை கையாள்வதற்கு மூன்று பிரதானிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். (நி-4)

## விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

மொனராகலை சிறைச்சாலை அதிகாரிகளின் தாக்குதல்களால் கைதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. பதுளை சிறைச்சாலை அத்தியட்சகரின் தலைமையில் இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். போதைப்பொருள் தொடர்பில் கைது செய்யப்பட்ட அம்பாறையை சேர்ந்த 40 வயதான கைதி ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# விமான நிலையத்தில் காத்திருந்த பெண் பயணிக்கு பிறந்த 3 குழந்தைகள் பிறந்தன



(டுபாய்)

டுபாய் சர்வதேச விமான நிலையத்தில் காத்திருந்த பெண் பயணிக்கு பிரசவ வலி ஏற்பட்டது. நிலைமையை உணர்ந்து அபுதாபி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு 3 குழந்தைகள் பிறந்தன.

சிரியாவைச்சேர்ந்த பெண் இமான் ஒபைத் அல் ஒக்லா (வயது-29). இவர் அந்த நாட்டில் தற்போது குடும்பத்துடன் வசித்து வருகிறார். கர்ப்பிணியான இவர் ஓமன் நாட்டில் இருந்து வந்து பெய்ரூட் நகரத்திற்கு செல்ல டுபாய் சர்வதேச விமான நிலையம் வந்து காத்திருந்தார். முனையம் 3 இல் அவர் செல்லும் இணைப்பு விமானத்தில் செல்வதற்காக கணவர் மற்றும் 3 குழந்தைகளுடன் அமர்ந்திருந்தார்.

அப்போது அவருக்கு திடீரென்று பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து அபுதாபியில் உள்ள தனது சகோதரி வீட்டிற்கு செல்லலாம். மேலும் அதற்கான நுழைவு விசா பெறலாம் என எண்ணி வலியைப் பொறுத்துக் கொண்டு அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தார்.

சாதாரணமாக அமீரக விசா பெறாதவர்கள் விமான நிலையத்திற்கு வெளியே வர அனுமதிக்கப்படமாட்டார்கள். இந்த நேரம் அந்த வழியாக டுபாய் குடியிருப்பு மற்றும் வெளிநாட்டவர் விவகார பொது இயக்குநரகத்தின் பொது இயக்குநர் முகம்மது அகமது அல் மர்ரி சிரேஷ்ட அதிகாரிகளுடன் ஆய்வு செய்து கொண்டே கடந்து சென்றார்.

உடனடியாகஅந்தபெண்ணை மருத்துவ உதவிக்காக டுபாய்க்குள் அனுமதிக்க உத்தர விட்டார். இதையடுத்து, 30 நிமிடங்களில் அமீரகத்திற்குள் அந்த பெண் வருவதற்கான அனுமதி பெறப்பட்டது.

இதற்கிடையே அந்த பெண்ணின் சகோதரி அபுதாபியில் உள்ளதால் அங்குள்ள வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அவர் அழைத்து செல்லப்பட்டார். அங்கு செல்லச் செல்ல அவருக்கு பிரசவ வலி கடுமையானது. அவரின் நிலைமையை உணர்ந்த மிகவும் விரைவாகச் செயற்பட்டு அங்குள்ள ஒரு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர், அந்தப் பெண்ணுக்கு டாக்டர்கள் பிரசவம் பார்த்தனர். அப்போது ஒரே பிரசவத்தில் அந்த பெண்ணுக்கு 3 அழகான குழந்தைகள் பிறந்தன. (ஜ-4)

# இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா வங்காள விரிகுடாவில் கூட்டுப் பயிற்சி



(விசாகப்பட்டினம்)


வங்காள விரிகுடா கடலில் இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய 4 நாடுகள் பங்கேற்கும் கூட்டு கடற்படை பயிற்சி தொடங்கியது.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய 4 நாடுகளும் 'குவாட்' என்ற அமைப்பின் கீழ் ஏற்கனவே ஒன்றுபட்டு இயங்கிவருகின்றன.

இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகிய 4 நாடுகளும் சீனாவின் ஆக்கிரமிப்பு முயற்சிக்கு எதிரானவை, இவை ஒன்றுபட்டு கூட்டுக் கடற்படை பயிற்சியில் ஈடுபட்டிருப்பது சீனாவுக்கு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் அதை வெளிப்படுத்த இயலாமல் தவிக்கிறது.

இந்தக் கூட்டு கடற்படை பயிற்சி பற்றி பீஜிங்கில் சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் வாங் வென்பின்னிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், "தொடர்புடைய 4 நாடுகளின் இராணுவ நடவடிக்கைகள், பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உகந்ததாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என பதில் அளித்தார். (நி)

# அமெரிக்கா ஜனாதிபதியாக யார் வந்தாலும் எமது கொள்கை மாறவே மாறாது- ஈரான்



(டெஹ்ரான்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் ஈரானின் கொள்கை ஒரே மாதிரியாகத்தான் இருக்கும் என்று ஈரான் மூத்த தலைவர் காமெனி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் ஈரானுடன் கடுமையான மோதல் போக்கை கையாண்டு வந்தார். ஒபாமா காலத்தில் கையெழுத்தான ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து அமெரிக்கா வெளியேறுவதாக கடந்த 2018 ஆம் ஆண்டு அவர் அறிவித்தார்.

மேலும் அவர் ஈரான் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதித்தார். இந்த சூழலில் நேற்று முன்தினம் அமெரிக்க ஜனாதிபதித்தேர்தல் நடந்தது.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும் ஈரானின் கொள்கை ஒரே மாதிரியாகத் தான் இருக்கும் என்று ஈரான் மூத்த தலைவர் அயத்துல்லா அலி காமெனி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், "அமெரிக்காவுடனான எங்கள் கொள்கை எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். எந்தத் தனிப்பட்ட நபரை சார்ந்தும் அது மாறாது. அமெரிக்க ஜனாதிபதியாக யார் வருகிறார்கள், யார் போகிறார்கள் என்பது முக்கியம் அல்ல" என்று தெரிவித்தார். (நி-4)

# மாநில செனட்டரான முதல் திருநங்கை சாரா மேக்ப்ரைட்

(வோஷிங்டன்)

ஜனநாயகக் கட்சியின் சாரா மெக்ப்ரைட், டெலாவேர் மாகாணத்தில் வெற்றிபெற்று மாநில செனட்டராக பதவியேற்க உள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். ட்ரம்ப்பை எதிர்த்து ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதிவேட்பாளராக ஜோ பைடன் போட்டியிடுகிறார்.

இந்த தேர்தலில் ஜனநாயக கட்சி சார்பாக டெலாவேர் மாகாணத்தின் மாநில செனட்டர் பதவிக்காக சாரா மெக்ப்ரைட் என்ற திருநங்கை போட்டியிட்டார்.

நேற்று வெளியான இதற்கான தேர்தல் முடிவுகளில் அவர் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அமெரிக்காவில் மாநில செனட்டராக பதவி



யேற்கும் முதல் வெளிப்படையான திருநங்கை என சாரா மெக்ப்ரைட் என பெயர் பெற்றுள்ளார். (நி-4)

# மும்பை விமான நிலைய பாதுகாப்பு அதிகரிப்பு



(டில்லி)

மும்பை விமான நிலையத்தில் தாக்குதல் நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்து இருக்கிறது.

அதில் எதிர்வரும் டிசெம்பர் 26 ஆம் திகதி மும்பை விமான நிலையத்தை குறிவைத்து பயங்கரவாத அமைப்புகள் தாக்க திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

தகவலை தொடர்ந்து பாதுகாப்பு ஏஜென்சிகள் மும்பை விமான நிலையத்துக்கு அதிகபட்ச எச்சரிக்கையை விடுத்து இருக்கிறது. (நி)

# தேர்தலில் பெரும் மோசடி; நீதிமன்றத்தை நாடவுள்ளதாக தெரிவிப்பு

(வோஷிங்டன்)

2020 அமெரிக்க தேர்தலில் மிகப்பெரிய மோசடி நடந்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ள ஜனாதிபதி ட்ரம்ப், வாக்கு எண்ணிக்கையை நிறுத்துவதற்காக உயர் நீதிமன்றத்தை நாட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் ஜோ பைடன் அதிக வாக்குகள் பெற்று தொடர்ந்து முன்னிலையில் உள்ளார்.

ட்ரம்ப் குறைந்த வாக்குகள் வித்தியாசத்தில் பின்தங்கி உள்ளார். இந்நிலையில் தேர்தல் நிலவரம் தொடர்பாக ஜனாதிபதி ட்ரம்ப் வெள்ளை மாளிகையில் உரையாற்றினார். அங்கு உரையாற்றுகையிலேயே ட்ரம்ப் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் மிகப்பெரிய வெற்றியை பெற்றிருக்கிறோம். தேர்தலில் மகத்தான ஆதரவு அளி



த்த அமெரிக்க மக்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜோர்ஜியா, டெக்சாஸ் உள்ளிட்ட மாநிலங்களில் அபார வெற்றி பெற்றுள்ளோம்.

இந்த தேர்தலில் மிகப்பெரிய மோசடி நடந்துள்ளது. எதிர்க்கட்சியினர் வெற்றியை திருடப் பார்க்கிறார்கள். தேர்தலுக்குப் பின்னரும் வாக்களிக்க முயற்சி நடக்கிறது. இதனை தடுக்க வேண்டும். வாக்கு எண்ணிக்கையை நிறுத்துவதற்காக உயர் நீதிமன்றத்தை நாட உள்ளோம் என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (நி)

# தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான போக்கை அரசாங்கம் இன்னும் கைவிடவில்லை

(கொழும்பு)

“அரசியல்தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக மட்டும் இணைந்து செயற்படும் அரசாங்கம் இன்னும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை கைவிடவில்லை” என ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

“சிறுபான்மையின மக்களை அடக்கி ஒடுக்கி, பெரும்பான்மையின மக்களின் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைத்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தொடர்ந்தும் சிறுபான்மையின மக்களுக்கு எதிரான போக்கை கடைப்பிடித்து வருகின்றது.

கொரோனா வைரஸ் தாக்கம் என்ற நெருக்கடியான சூழ் நிலையிலும்கூட இனவாதத்தையும் குறுகிய அரசியல் நோக்கங்களையும் ஆட்சியாளர்கள் கைவிடுவதாக இல்லை. உலகில் ஏனைய நாடுகளில் அனைவரும் ஓர் சமூகமாக இணைந்து இந்தச் சவாலை எதிர்கொள்கின்றனர்.

ஆனால் இங்கு சமூகங்கள் பிரிக்கப்படு கின்றன, பழிவாங்கப்படுகின்றன.

முதலாம் அலையின்போது முஸ்லிம் மக்களே வைரஸை பரப்புகின்றனர் என்ற விம்பம் உருவாக்கப்பட்டது, அதுமட்டுமல்ல கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டது.

பலவந்தமாக சடலங்கள் எரிக்கப்பட்டன. திடீரென உயிரிழந்தவர்களின் சடலங்கள்கூட கொரோனா சந்தேகத்தில் எரிக்கப்பட்டன. இது முஸ்லிம் மக்களின் மத விவகாரங்களுக்கு முரணான செயலாகும் என சுட்டிக்காட்டினார்.

மறுபுறத்தில் சமூகத்தை வதைக்கும் இந்த அரசாங்கத்துக்கு முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேசக்கரம் நீட்டியமை வேதனையளிக்கின்றது. குறைந்தபட்சம் கொரோனாவால் ஒருவர் மரணித்தால்கூட அவரின் சடலத்தை அடக்கம் செய்வதற்கான அனுமதியை பெற்றுக்கொடுத்திருக்கலாம். அதனை செய்யாமல் ஆதரவு வழங்கிவிட்டு தொடர்ந்தும் கையேந்தும் நிலைமை காணப்படுகின்றது.

அதேவேளை, முஸ்லிம் மக்களின் மத நம்பிக்கை, பண்பாடுகளுக்கு மதிப்பளித்து, உலக சுகாதார அமைப்பின் பரிந்துரைகளையும் கருத்திற்கொண்டு சடலங்களை அடக்கம் செய்வதற்கான அனுமதியும் வழங்கப்பட வேண்டும்” என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கொரோனாவை கட்டுப்படுத்த ஊடகவியலாளர்கள் ஆற்றும் பணி பாராட்டுதற்குரியது- ஹெகலிய

(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கு ஊடகவியலாளர் ஆற்றும் பணி மேன்மைமிக்கது என அமைச்சர் ஹெகலிய ரம்புக் வெல தெரிவித்துள்ளார்.




பெரும்பாலான ஊடகவியலாளர்கள் தமது உயிர்களையும் துச்சமாக மதித்து செயற்பட்டு வருவதைக் காண முடிகிறது. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாடு எதிர்கொள்ளும் அனர்த்த நிலைமைகளில் ஊடகவியலாளர்கள் தமது தொழில் வாண்மையை கருத்திற்கொள்ளாமல் சிறப்பு மிக்க தேசிய கடமையை நிறைவேற்றுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

சில ஊடகவியலாளர்கள் இந்தத் தொற்று நிலமையைத் தோற்கடிப்பதற்காக மக்களுக்கு வழங்கிய அறிவும் விளக்கமும் தகவல்களும் மிகவும் துணை புரிந்திருப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

பல ஊடக நிறுவனங்கள் ஒன்றிணைந்து மக்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளன. பிராந்திய ஊடகவியலாளர்களின் பொறுப்புக்களும் மிகவும் சிறப்பு மிக்கதாகும். எதிர்காலத்தில் இதற்காக உரிய பாராட்டை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் குறிப்பிட்டார். (நி-4)

## கொரோனா நோயாளிகள் அடையாளம்



(கொழும்பு)

கொழும்பு - தெற்கு போதனா வைத்தியசாலையில் (களுபோவில) மேலும் இரு தாதியர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலையின் ஏழாவது விடுதியில் பணிபுரியும் இரு தாதியர்களே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஏற்கனவே களுபோவில போதனா வைத்தியாசாலையில் பணியாற்றிய வைத்தியர் இருவருக்கும் தாதியொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்த நிலையில் மேலும் இரு தாதியர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பு தீயணைப்பு பிரிவைச் சேர்ந்த வீரர் ஒருவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளதாக வெளியான பி.சி.ஆர். முடிவுகளில் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

பொகவந்தலாவ - கொட்டியாகலை பகுதியில் மேலும் மூவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இரண்டாவது தடவையாக நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் இவர்களுக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று புதன் கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

முதல் சுற்று பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றவில்லை என்ற முடிவு வெளியாகியிருந்த நிலையில், தற்போது அவர்களுக்கு வைரஸ் தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஜ-4)

## தற்போதைய கொரோனா பரவலையும் கட்டுப்படுத்த இலங்கையால் முடியும்

### உலக வங்கி நம்பிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை உலக வங்கி பாராட்டியுள்ளது.

அந்த வங்கியின் மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் பாரிஸ் ஹேய்டட் சர்வோஸ் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.


இலங்கையும் - உலக வங்கியும் பல வருடங்களாக பரஸ்பர நம்பிக்கையுடன் செயற்பட்டு வருவதாக சர்வோஸ் சுட்டிக்காட்டினார். தற்போதைய தொற்றுப் பரவலை விரைவில் கட்டுப்படுத்த இலங்கையால் முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்குத் தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக உலக வங்கி உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கடல் புறா

## அரபு நாட்டு அமீர்

காலத்தின் பதிவு 41



சாண்டில்யன்

அநபாயன் அந்தப் பெரிய சரீரத்தின் முதுகில் செல்லமாகத் தட்டிக் கொடுத்தான். பிறகு இளைய பல்லவனை நோக்கிவிட்டு அந்த மனிதனிடம் திரும்பி, "அமீர்! இதென்ன சண்டைக்கு ஆயத்தம்?" என்று வினவினான்.

அமீர் தன் சீனக் குல்லாய் தரையில் தாழ அநபாயனை நோக்கி வணங்கிவிட்டுச் சொன்னான். "என் குடிசையில் தங்களை எதிர்பார்த்து வந்தேன். ஆனால் இவர்களிருந்தார்கள்" என்று.

"உனக்கு இவர்கள் அறிமுகமில்லை. இருந்தாலென்ன? யாரென்று கேட்டுத் தெரிந்து கொள்வதுதானே?" என்றான் அநபாயன்.

"வந்தவுடனே கேட்க முடியவில்லை" என்று பதில் சொன்ன அமீரின் உதடுகளில் நமட்டு விஷமம் தெரிந்தது.

"ஏன்?" என்று வினவிய அநபாயன் அமீரை விட்டு இளைய பல்லவனையும் காஞ்சனா தேவியையும் நோக்கினான். இளையபல்லவன் முகத்திலிருந்த சங்கடச் சாயையும் காஞ்சனாதேவியின் முகத்தில் திடீரென மண்டி விட்ட குழப்பமும் குழப்பத்தைத் தொடர்ந்து சிவந்த கன்னங்களும் ஓரளவு கதையைச் சொல்லவே அநபாயன் முகத்தில் ஓரளவு வியப்பே விகசித்தது.

வங்கக் கடலுக்கு அப்புறத்திலும் இப்புறத்திலும் இருக்கும் இரு நாடுகளைச் சேர்ந்த இருவர் திடீரெனச் சந்தித்து மூன்று நாட்களுக்குள் காதல் வலையில் கட்டுப்படுவது இயற்கையின் வன்மையைச் சுட்டிக் காட்டுகிறதா, விதியின் வலிமையை வலியுறுத்துகிறதா? என்பதை நினைத்துப் பார்த்து விடை காணாத அநபாயன் இதழ்களில் மெல்லப் புன்முறுவல் தவழ்ந்தது. அதைத் தொடர்ந்து. "அப்படியா!" என்ற சொல்லும் வெளிவந்தது.

அந்த "அப்படியா" வில் ஆயிரம் அர்த்தங்கள் தொனிப்பதை உணர்ந்த இளைய பல்லவனின் குழப்பமும் காஞ்சனாதேவியின் சங்கடமும் அதிகரித்து விட்டதையும் அவர்கள் கண்கள் நிலத்தில் தாழ்ந்து விட்டதையும் கண்ட அமீர், "ஆம்! அதனால்தான் வந்தவுடன் விசாரிக்க முடியவில்லை.

விசாரித்தபோது இவர்கள் பதிலும் சரியாகச் சொல்லவில்லை. இவர்கள் பெயர்களையும் சொல்ல மறுத்தார்கள். இவர்களை அழைத்து வந்தவரின் பெயரையும் சொல்ல மறுத்தார்கள். போதாக்குறைக்கு அந்தப் பெண்ணும் வாளை எடுத்தாள். பிறகு அந்த வாளை அவர் பிடுங்கிக் கொண்டார். நானும்..."

"குறுவாளிடம் கையைக் கொண்டு போயிருப்பாய்" என்று அமீரின் வாசகத்தை அநபாயன் முடித்ததைக் கண்ட இளையபல்லவன், வியப்பின் எல்லையை எய்தினான். அநபாய்ன் மேற்கொண்டு சொன்னது அந்த வியப்பை ஆயிரம் மடங்கு அதிகரிக்கவே செய்தது.

"நல்ல வேளை அமீர்! குறுவாளை எடுக்காதிருந்தாயே! அதைக் கண்டாலே எனக்குப் பயம்" என்று கூறிய அநபாயன் மறுபடியும் அமீரின் முதுகில் தட்டிக் கொடுத்தான்.

அநபாயன் போக்கு எதுவும் பிடிபடவில்லை இளையபல்லவனுக்கு. யார் இந்த அமீர்? இவன் எப்படிப் பரீட்சயம் அநபாயருக்கு. குறுவாளை எடுத்து வீசுவது பற்றிச் சற்று முன்பு அமீர் சொன்னதை, அநபாயரும் ஊர்ஜிதப்படுத்துகிறாரே என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்ட இளையபல்லவன், அந்தக் கேள்விகளை நேராகவே கேட்டுவிட இஷ்டப்பட்டு அநபாயனை ஏறெடுத்து நோக்கினான்.

இளையபல்லவன் மனத்திலோடிய எண்ணங்களை முகமே பிரதிபலித்திருக்க வேண்டும். அவையனைத்தையும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிந்து கொண்ட அநபாயன், இளையபல்லவன் வாய் கேள்விகளைக் கேட்கு முன்பே பதில் கூறினான்: "கருணாகரா! அமீர் எனக்கு நீண்ட நாள் பழக்கமுள்ளவன்.

அவனை விடத் திறமையும் எந்த அபாயத்தையும் சமாளிப்பதில் வல்லமைச்சாலியுமான ஒருவனைக் கண்டுபிடிப்பது அசாத்தியம். கப்பலோட்டுவதிலும் கப்பல் போரிலும் இணையற்ற சாமர்த்தியமுள்ளவன். இந்தக் கீழ்க்கடல் பிராந்தியம் முழுவதையும் நன்கறிந்தவன்.

அரபு நாட்டிலிருந்து சீன நாடு வரை உள்ள துறைமுகங்கள் அனைத்தும் தெரியும் இவனுக்கு. நூறு அடிக்கு அப்பாலுள்ளவர்களைக் குறுவாள் எறிந்து கொல்லுவதில் நிகரற்றவன். பார்ப்பதற்கு பளுவாயிருக்கும் இந்தத் தேகத்தைச் சண்டை சமயத்தில் பார்த்தால் ஆச்சரியப்படுவாய். வாளிப்பான சரீரத்தைவிடச் சுறுசுறுப்பாய் வேலை செய்யும்.

இந்தப் பாலூர்ப் பெருந்துறையிலிருந்து நம்மைக் காப்பாற்ற வல்லவன் அமீர் ஒருவன்தான். அமீரிடம் தான் நம்மை ஒப்படைத்திருக்கிறேன்" என்று விளக்கினான் அநபாயன்.

"ஒன்று மறந்துவிட்டேன். அமீரின் தயவில்லாவிட்டால் தூதுப் புறா மூலம் நான் குணவர்மனுக்குச் செய்தியனுப்பியிருக்க முடியாது. புறா அமீருக்குச் சொந்தம்" என்று கூறினான் சோழர்குல இளவல்.

அமீரின் இந்தப் பிரதாப புராணத்தைக் கேட்ட இளையபல்லவன் சில விநாடிகள் பதிலேதும் சொல்லவில்லை. பிறகு கேட்டான்: "நம்மைத் தப்புவிக்கும் பொறுப்பைப் பிற நாட்டார் ஒருவரிடம் ஒப்படைத்திருப்பதாகக் கூறினீர்களே, அவர் இவர்தானா?" என்று.

"ஆம் அமீர் அரபு நாட்டைச் சேர்ந்தவன். சீன நாட்டில் அடிமையாக விற்கப்படான். அங்கிருந்ததால் அந்த நாட்டுப் பழக்க வழக்கங்கள் கலந்துவிட்டன" என்று விளக்கிய அநபாயன், "அதுமட்டுமல்ல கருணாகரா? யாரும் தப்ப முடியாத சீன அடிமைத்தளத்திலிருந்து தந்திரத்தால் தப்பி வந்திருக்கிறான்.

இப்பொழுதுகூட அமீரைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்குச் சீனாவில் ஆயிரம் பொற்காசுகள் பரிசு கிடைக்கும். ஆனால் அமீரைப் பிடிப்பது முடியாத காரியம்" என்று பெருமையுடன் சொல்லவும் செய்தான்.

அத்துடன் அமீரின் கதையை முடிக்க இஷ்டப்பட்ட அநபாயன், கருணாகரா! அமீரின் கதையை முழுவதும் சொன்னால் கேட்கத் தெவிட்டாது. இன்னொரு நாள் சொல்கிறேன்.

இப்பொழுது நாம் கவனிக்க வேண்டிய அலுவல் வேறு" என்று கூறிவிட்டு "என்ன அமீர்! நாங்கள் தப்பிச் செல்ல வழி ஏதாவது கண்டு பிடித்தாயா?" என்று அமீரை நோக்கி வினவினான்.

"கண்டு பிடிக்காமல் வருவேனா?" என்றான் அமீர்.

"எந்த வழியில் தப்பலாம்?" என்று அநபாயன் விசாரித்தான்.

"நிலவழி முடியாது பலமாகக் காக்கப்பட்டிருக்கிறது. நீர் வழிதான் சௌகரியம்."

"அதற்குத் திட்டமிருக்கிறதா?"

"இருக்கிறது."

என்ன திட்டம்?"

"வந்தால் காட்டுகிறேன்."

"சரி, புறப்படுவோம்."

அநபாயனின் இந்தக் கட்டளையைத் தொடர்ந்து குடிசையிலிருந்தவர்கள் வெளியேறினார்கள். அமீர் அழைத்துச் சென்ற இடம் மட்டுமல்ல, அவன் விபரித்த திட்டமும் மிகப் பயங்கரமாக இருந்தது.

ஆனால் அதை விட்டால் தப்ப வேறு வழியுமில்லையென்பதை அநபாயன் மட்டுமின்றி மற்றவர்களும் புரிந்து கொண்டார்கள்.

(தொடரும்...)

# தொற்றா நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கொரோனா தொற்றும் வேகம் அதிகம்

(கொழும்பு)

**மேல் மாகாணத்தில் அண்மையில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 30 சதவீதமானோர் 60 வயதிற்கு மேற்பட்டோராவர். இளைஞர்களுடன் ஒப்பிடும் போது உயிரிழக்கக் கூடிய எச்சரிக்கையும் இந்த வயதுடையோருக்கே அதிகமுள்ளதாக பணிப்பாளர் விசேட வைத்தியர் பாலித கருணா பேம தெரிவித்தார்.**

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னரை விட தற்போதுள்ள வைரஸின் தன்மையானது பரவும் வேகம் அதிகமாகும். சுமார் 25 வயதுடைய இளைஞர்களுடன் 60 வயதுடையவர்களை ஒப்பிட்டு அவதானிக்கும் போது 60 வயதுடையோர் மரணிக்கக் கூடிய எச்சரிக்கை 30 சதவீதம் அதிகமாகக் காணப்படுகிறது.


முதியவர்கள் எந்தளவு பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பது இதன்மூலம் தெளிவாகிறது.

அத்தோடு நாட்பட்ட தொற்றா நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் இந்த அவதான நிலைமை காணப்படுகிறது. அதிக இரத்த அழுத்தம், இதய நோய் மற்றும் நீரிழிவு நோய் என்பவற்றில் பாதிக்கப்பட்டவர்கள் இதில் உள்ளடங்குவர். அண்மையில் மேல் மாகாணத்தில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களில் 30 சதவீதமானோர் 60 வயதை விட அதிக வயதுடையவர்களாவர்.

ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் தமது சேவைகளை ஆற்றும் போது அடிப்படைச் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

மக்கள் ஒன்றுகூடும் இடங்களில் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமுள்ளதால் இயன்றவரை உற்சவங்கள், வைபவங்களை குறைத்துக் கொள்ளுமாறு கோரப்படுகின்றனர் என்றார். (நி-4)

# ஐ.நா.சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக மொஹான்



(கொழும்பு)

முன்னாள் தலைமை நீதிபதி மொஹான் பீரிஸை ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதியாக நியமிக்க உயர் பதவிகளுக்கான பாராளுமன்ற குழு அனுமதி வழங்கியுள்ளது. பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## முகாம்களை தனிமைப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் 3 முகாம்களை தனிமைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் களனி, களுபோவில மற்றும் இராஜ கிரிய ஆகிய பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம்களையே இவ்வாறு தனிமைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் 56 பேர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் 183 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (நி-4)

# பசில் மீண்டும் பாராளுமன்றம் வருவது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாகும்



(கொழும்பு)

பசில் ராஜபக்ஷ மீண்டும் பாராளுமன்றத்திற்கு வர வேண்டும் என்பதே நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர், "பசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்திற்கு வருவதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவிப்பதை போன்றே வெளியில் உள்ளவர்களும் விருப்பத்துடன் உள்ளனர்.

அவர் பாராளுமன்றத்திற்கு வந்து பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த முழு ஒத்துழைப்பை வழங்குவார் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கு உண்டு.

கோட்டாபய ராஜபக்ஷவின் இரட்டை பிரஜாவுரிமை பிரச்சினை காணப்பட்டபோது, அவருக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அப்போது கோட்டாபய ராஜபக்ஷவை பூதாகரமாக காட்டினார்கள். தற்போது பசில் ராஜபக்ஷவை பூதாகரமாக காட்ட முயல்கின்றார்கள்"எனக் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பெரியார்

ஒரு தடவை பெரியார் தங்கச்சி வீட்டுக்கு போயிருந்தாராம். தங்கச்சி வீட்டிலே ஏதாவது விசேடமான சாப்பாடு என்றால் அப்பொழுதெல்லாம் இவரைக் கூப்பிட்டு சாப்பிடச் சொல்லுவாங்களாம்.அது மாதிரி அன்றைக்கும் கூப்பிட்டிருப்பார்கள் போயிருக்கின்றார். தங்கச்சிக்கு ஒரு மகன்.. .அப்பொழுது அந்த பையனுக்கு வயது 9. (ஈரோடு சாமி)

அந்தப் பையன்தான் ஓடி வந்து இவரைக் கூப்பிட்டுக் கொண்டு போவது வழக்கம்.

வழக்கப்படி அந்தப் பையன்தான் ஒரு செம்பிலே தண்ணீர் எடுத்து கை அலம்புவதற்காக ஊற்றுவான். பெரியார் அதிலே கை கழுவிக் கொள்வார். இப்படித்தான் ஒரு சமயம் அந்தப் பையன் மிகவும் அக்கறையாக ஒரு செம்பிலே தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடி வந்தான் குனிந்து அதை ஊற்றிக் கொண்டே இருந்தான்.பெரியார் கையை கழுவிக் கொண்டே இருந்தார்.

அந்த சமயத்திலே தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த அந்த பையன் தலையிலே பொட்டென்று ஓர் அடி விழுந்தது. யார் என்று நிமிர்ந்து பார்த்தான். பார்த்தால் பெரியாரேதான் இன்னொரு கையாலே அப்படி தட்டியிருக்கின்றார்.

ஏன் இப்படி தலையில் அடித்தார் என்று அந்தப் பையனுக்கு ஒன்றும் புரியவில்லை. திகைத்துப் போய் பேசாமல் இருந்து விட்டான். ஒன்றும் கேட்கவில்லை. இருந்தாலும் பெரியார் சும்மா விடவில்லை. அந்தப் பையனைப் பார்த்தார். ஏன் அடித்தீர்கள்? என்று கேள் என்றார். ஏன் அடித்தீர்கள் என்று கேட்டான் அந்தப் பையன். அதற்குப் பெரியார் சொன்னார்...இது தண்ணியா இருக்கின்றதனாலே தான் இப்படி தாராளமாக ஊற்றுகின்றாய் நெய்யா இருந்தால் இப்படி ஊற்றுவாயா? தண்ணீராக இருந்தாலும் அதை அளவோடு தான் செலவு செய்ய வேண்டும். வீணாக்கக் கூடாது என்றாராம். இது இந்தக் காலத்திற்கும் தேவையான ஓர் அறிவுரை. அந்தப் பையன் அப்பொழுதே இந்த அறிவுரையை மனதிலே வைத்துக் கொண்டான். அவர் பிற்காலத்திலே வாழ்க்கையிலேயும் வியாபாரத்திலேயும் முன்னுக்கு வருவதற்கு அது மிகவும் உபயோகமாக இருந்திருக்கின்றது. பெரியவர்கள் எல்லாம் எங்களிடம் சின்னச்சின்ன விடயத்துக்கெல்லாம் சிக்கனமாக இருக்கச் சொல்லுவார்கள். அப்பொழுதெல்லாம் அது நமக்கு வேடிக்கையாகத் தெரியும். அந்த மாதிரி அறிவுரைகளோடு மதிப்பு பின்னர் அனுபவத்திலே தான் நமக்குப் புரியும்.

இதைவிட வேடிக்கையான சம்பவம் கூட ஒன்று உண்டு. பெரியார் ஒரு தரம் தன்னுடைய உதவியாளர் ஒருத்தரை கூப்பிட்டாராம். அவர் வந்து நின்று என்ன செய்ய வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். யாருக்கோ ஒருத்தருக்கு ஒரு தந்தி கொடுக்கச் சொன்னாராம். தந்தியிலே கொடுக்க வேண்டிய விடயம் என்னாங்கய்யா என்று கேட்டிருக்கிறார் உதவியாளர். ஏற்கனவே சொல்லியாச்சு என்னும் விடயத்தைத்தான் தந்தியிலே கொடுக்க வேண்டும். அதிகமாக வார்த்தைகளை செலவழிக்காமல் சுருக்கமாகக் கொடு அப்படி என்று சொல்லி அதற்கான காசும் கொடுத்தனுப்பினாராம்.

அந்த உதவியாளர் உடனே போய் தந்தியை கொடுத்துவிட்டு வந்துவிட்டார். வந்ததும் பெரியார் கேட்டாராம். எப்படி கொடுத்தாய் தந்தி வாசகம் என்னவென்று.. Already Told என்று இரண்டே வார்த்தையிலே கொடுத்து விட்டேன் என்றார் மிகவும் பெருமையாக. இன்னும் கூட சுருக்கிக் கொள்ளலாம். ஒரே வார்த்தையிலே அதை சொல்ல முடியாதா? என்றாராம் பெரியார்.அது எப்படீங்க முடியும் என்றிருக்கின்றார் அவர்.

Tolded என்று கொடுக்க வேண்டியது தானே என்றாராம். அப்படி ஒரு வார்த்தை இங்கிலீஷ்லே இல்லையே என்றாராம்.

இல்லை என்றால் என்னய்யா..விடயம் ,புரிகின்றதா? இல்லையா? தந்தியை வாங்குகின்றவர் அதைப் புரிந்து கொள்ள மாட்டாரா? என்றாராம் பெரியார். ஒரு தடவை பெரியார் ஒரு மேடையில் உட்கார்ந்திருக்கின்றார். மேடைக்கு எதிரிலே கீழே முதல் வரிசையில் அவருக்கு எதிரிலே கால் மேலே கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கின்றார் ஒருவர். இதைப் பார்த்துவிட்டு ஒருவர் பெரியாரிடம் சொன்னாராம்...பாருங்கய்யா அவனை. கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல் கால் மேல் கால் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கின்றான் என்றாராம். அவன் காலை அவன் கால் மேல் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கின்றான். இதிலே நமக்கு எங்கைய்யா மரியாதை குறைந்து விட்டது என்றாராம்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

10


கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



படம்-3

## CHECKS AND BALANCES

| | | |
|---|---|---|
| **Executive Branch** (President carries out laws)  | **Checks on the Legislative Branch** Can propose laws; Can veto laws; Can call special sessions of Congress; Makes appointments; Negotiates foreign treaties | **Checks on the Judicial Branch** Appoints federal judges; Can grant pardons to federal offenders |
| **Legislative Branch** (Congress makes laws)  | **Checks on the Executive Branch** Can override President's veto; Confirms executive appointments; Ratifies treaties; Can declare war; Appropriates money; Can impeach and remove President | **Checks on the Judicial Branch** Creates lower federal courts; Can impeach and remove judges; Can propose amendments to overrule judicial decisions; Approves appointments of federal judges |
| **Judicial Branch** (Supreme Court interprets laws)  | **Check on the Executive Branch** Can declare executive actions unconstitutional | **Check on the Legislative Branch** Can declare acts of Congress unconstitutional |




சட்டப்பேரவை **(Congress)** யால் தலைமை தாங்கப்படும் சட்டத்துறை, பிரதிநிதிகள் சபை **(House of Representatives)** மற்றும் ஆட்சிமன்றம் **(Senate)** என்னும் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்று முன்னர் கூறியிருந்தோம். இதற்கும் ஒரு முக்கியமான காரணம் உள்ளது. இந்த இரு அவைகளின் பெரும் பணியே மக்களுக்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதுதான். சட்டம் இயற்றுவது, பட்ஜெட் மசோதாக்களைத் துவங்குவது என்பன காங்கிரசில் உள்ள பிரதிநிதிகள் சபையின் உரிமைகள் ஆகும். அதிகாரிகளைக் குற்றம் சாட்டுவது, ஒப்பந்தகளை அங்கீகரிப்பது இவையெல்லாம் செனட் சபையின் (ஆட்சிமன்றம்) உரிமைகள் ஆகும்.

இறுதிப்பெரும்பான்மை, அதாவது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் இயற்றப்படும் எந்தச் சட்டத்தையும்அமெரிக்க ஜனாதிபதியால்மறுக்க வியலாது. இந்த உரிமையின் மூலம், ஜனாதிபதி சர்வாதிகாரியாகச் செயற்படுவது மட்டுப்படுத்தப்படுகிறது. அதே சமயம், நாட்டு நலனில் அக்கறையில்லாமல் கட்சிக்காக மட்டும் இயற்றப்படும் சட்டங்களை மறுக்கவும் ஜனாதிபதிக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளதால் ஒற்றுமையுடனும். அனுசரித்தும் செயற்பட வேண்டிய கட்டாயம் இரு துறைகளுக்கும் (நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டத்துறை) ஏற்படுகிறது.

நீதித்துறை உச்சநீதிமன்றத்தால் வழிநடத்தப்படுகிறது. அரசியல் அமைப்பின் உட்பொருளை உணர்ந்து தீர்ப்பு வழங்குவது, சட்டங்களை சீராய்வது, மாநிலங்களின் உரிமை பற்றிய வழக்குகளை விசாரித்து முடிவு செய்வது இத்துறையின் பொறுப்புகளாக அமைகின்றன. இத்துறைக்கு இவ்வித உரிமையை அதிகாரத்தை வழங்குவதன் மூலம் சட்டப்பேரவை அரசியல் அமைப்புக்குப் புறம்பான, தனிமனித உரிமையைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை இயற்றிச் செயலாக்குவது தடுக்கப்படுகிறது.

தடைகளும் சமப்படுத்துதலும் **(Checks and Balances)** எவ்வாறு கையாளப்படுகின்றது என்பதை படம்-3 காட்டுகிறது.

**சட்டங்கள் உருவாக்கப்படுவது பின்வரும் கோர்வையாக நடக்கும். பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் அல்லது செனட்டர்கள் ஒருவரோ அல்லது பலரோ இணைந்து மசோதா கொண்டு வர அது வாக்கெடுப்பில் பிரதிநிதிகள் சபை, செனட்சபை இரண்டிலும் வெற்றி பெற்றால், அது ஜனாதிபதியின் கையெழுத்திற்கு அனுப்பப்படும். அவர் கையொப்பமிட்டதும் உருவாகிய சட்டத்தை வலியுறுத்த வேண்டியது உச்ச நீதிமன்றத்தின் கடமை.**

2000 இல்நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் (ஜோர்ஜ் புஷ்ஃஅல் கோர் ) புளோரிடா (Florida) மாநிலத்தில் நடந்த வாக்கு எண்ணிக்கைக் குழப்பம் அமெரிக்க உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பாலேயே தீர்த்துவைக்கப்பட்டது. அரசியல் அமைப்பின் பதின்னான்காம் திருத்தம் மீறப்பட்டது என்பதாலேயே உச்சநீதிமன்றம் இவ்வழக்கில் தன்னை நுழைத்துக்கொண்டது

எது எப்படியிருப்பினும், ஜோர்ஜ் புஷ் **(George Bush)** ஐ விடப் பத்து இலட்சம் வாக்குகள் அதிகம்பெற்ற அல் கோர் **(Al Gore)** அமெரிக்க ஜனாதிபதி ஆகவில்லை. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினால் ஜோர்ஜ் புஷ்ஷே ஜனாதிபதிஆனார். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அந்நாள் ஜனாதிபதி பில் கிலிண்டன் **(Bill Clinton)** மதித்தார். அரசவையைக் கலைக்கவில்லை. தன் துணை ஜனாதிபதியே தேர்தலில்வென்றார் என்று அறிக்கையும் விடவில்லை.

### இதுவரை இருந்த அமெரிக்க ஜனாதிபதிகள்

அமெரிக்காவை 45 ஜனாதிபதிகள் 58 முறை ஆட்சிசெய்துள்ளார்கள். அமெரிக்காவின் முதல் தலைவராக ஏப்ரல் 30, 1789 ஆம் ஆண்டு ஜோர்ஜ் வாஷிங்டன் மக்களாட்சி முறையில், வாக்களிப்பு மூலம் தேர்வு செய்யப்பட்டார். இவர் எந்தவொரு கட்சியையும் சாராத ஜனாதிபதி ஆவார். இவர் இருமுறை (1789 - 1797) ஆட்சி செய்துள்ளார். ஜான் ஆடம்ஸ் (1797 - 1801) பெடரல் கட்சியைச் சார்ந்தவர். தாமஸ் ஜெபர்சன் (1801 - 1809), ஜேம்ஸ் மெடிசன் (1809-1817), ஜேம்ஸ் மோனோர் (1817 - 1825), ஜான் குயின்சி ஆடம்ஸ் (1825 - 1829) ஆகியோர் ஜனநாயக- குடியரசு கட்சியைச் சார்ந்தவர்கள். ஆன்ட்ரூ ஜாக்ஸன் (1829 - 1837), மார்டின் வேன் புரேன் (1837 - 1841) ஆகியோர் ஜனநாயக கட்சியைச் சார்ந்தவர்கள். வில்லியம் ஹென்றி ஹாரிசன் (1841), ஜான் டெய்லர் (1841 - 1845) ஆகியோர் விக் **(Whig)** கட்சியைச் சார்ந்தவர்கள். ஜேம்ஸ் போல்க் (1845 - 1849) ஜனநாயக கட்சியைச் சார்ந்தவர். சசாரி டெய்லர் (1849 - 1850), மிலார்டு பிலிமோர் (1850 - 1853) ஆகியோர் விக் **(Whig)** கட்சியைச் சார்ந்தவர்கள்.

1853 ஆம் ஆண்டின் பின் ஜனநாயக கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது குடியரசு கட்சியைச் சார்ந்தவர்களே அமெரிக்க ஜனாதிபதிகளாக தெரிவு செய்யப்படுகிறார்கள். அவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

ஜனநாயக கட்சியைச் சார்ந்த அமெரிக்க ஜனாதிபதிகள் - பிராங்கிளின் பியர்ஸ் (1853 - 1857), ஜேம்ஸ் புச்சானன் (1857 - 1861), ஆன்ட்ரூஸ் ஜான்சன் (1865 - 1869), க்ளோவர் க்ளீவ்லேன்ட் (1885 - 1889), க்ளோவர் க்ளீவ்லேன்ட் (1893 - 1897), வூவ்ட்ரோ வில்சன் (1913 - 1921), பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் (1933 - 1945), இவர் மூன்று முறை தெரிவு செய்யப்பட்டார், ஹாரி எஸ் ட்ரூமேன் (1945 - 1953), ஜான் எப் கென்னடி (1961 - 1963), லிண்டன் பி ஜான்சன் (1963 - 1969), ஜிம்மி கார்டர் (1977 - 1981), வில்லியம் கிளின்டன் (1993 - 2001), பராக் ஒபாமா(2009-2017).

குடியரசு கட்சியைச் சார்ந்த அமெரிக்க ஜனாதிபதிகள் - ஆபிரஹாம் லிங்கன் (1861 - 1865), உல்செஸ் எஸ் கிராண்ட் (1869 - 1877), ரூதர்போர்டு பி ஹேயாஸ் (1877 - 1881), ஜேம்ஸ் ஏ கார்பீல்டு (1881), செஸ்டர் ஏ ஆர்தர் (1881 - 1885), பெஞ்சமின் ஹாரிசன் (1889 - 1893), வில்லியம் மெக்கினாலே (1897 - 1901), தியோடர் ரூஸ்வெல்ட் (1901 - 1909), வில்லியம் எச் டாப்ட் (1909 - 1913), வாரன் ஹார்டிங் (1921 - 1923), கால்வின் ஹார் டிங் (1923 - 1929), ஹெர்பெர்ட் ஹோவர் (1929 - 1933), ட்வைட் டி எசன் ஹோவர் (1953 - 1961), ரிச்சர்டு எம் நிக்சன் (1969 - 1974), ஜெரால்டு ஆர் போர்டு (1974 - 1977), ரோனால்டு டபிள்யூ ரீகன் (1981 - 1989), ஜோர்ஜ் புஷ் (1989 - 1993), ஜோர்ஜ்.டபிள்யூ புஷ் (2001 - 2009), டொனால்ட் ட்ரம்ப் (2017- ). 45வது தலைவராக டொனால்ட் ட்ரம்ப் 2017 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டார்.

**அமெரிக்காவை 45 ஜனாதிபதிகள் 58 முறை ஆட்சி செய்துள்ளார்கள். அமெரிக்காவின் முதல் தலைவராக ஏப்ரல் 30, 1789 ஆம் ஆண்டு ஜோர்ஜ் வோஷிங்டன் மக்களாட்சி முறையில், வாக்களிப்பு மூலம் தேர்வு செய்யப்பட்டார். இவர் எந்தவொரு கட்சியையும் சாராத ஜனாதிபதி ஆவார். இவர் இரு முறை ஆட்சி செய்துள்ளார். பெடரல் கட்சியிலிருந்து ஒருவர் ஒரு முறையும், விக் (Whig) கட்சியிலிருந்து நால்வர் இரு முறையும், ஜனநாயக- குடியரசு கட்சியிலிருந்து நால்வர் ஏழு முறையும். ஜனநாயக கட்சியிலிருந்துபதினாறு பேர் 23 முறையும். குடியரசு கட்சியிலிருந்து பத்தொன்பது பேர் 23 முறையும் அமெரிக்க ஜனாதிபதிகளாக தெரிவாகியுள்ளனர்.**

(தொடரும்...)

# கொரோனா கொத்தணிக்கான காரணம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மினுவாங்கொட தொழிற்சாலையின் கொரோனா பரவலின் உப பரவலான பேலியகொட மீன் சந்தையில் கொரோனா பரவல் பணத்தாள் மூலம் ஏற்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மீன் சந்தைக்கு இடையில் வைரஸ் பரவ பணத்தாள் தான் முக்கிய காரணம் என விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

பேலியகொட உப பரவலில் நான்கு நாட்களுக்குள் 5 ஆயிரத்து 513 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதாரப்பிரிவு மற்றும் பாதுகாப்புப்பிரிவு இணைந்து மேற்கொண்ட விசாரணையில் பேலியகொட மீன் சந்தையில் B.1.42 என்ற ஆபத்தான கொரோனா பணத்தாள் ஊடாக பரவியுள்ளது.

பணத்தாள் மற்றும் மீன் சந்தையில் விற்பனை செய்யும் மீன் விற்பனையாளர்களின் எச்சில் ஊடாக இந்த கொரோனா பரவல் ஏற்பட்டுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொட கொரோனா பரவல் கடந்த மாதம் 3 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில் அதனைத்தொடர்ந்து உப பரவலாக பேலியகொட கொரோனா பரவல் ஒக்டோபர் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மட்டக்களப்பில் கடும் சோதனை

(மட்டக்களப்பு)


சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாதவர்களைக் கண்டறிய மட்டக்களப்பு நகரில் இராணுவத்தினரும் பொலிஸாரும் பல முக்கிய இடங்களில் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் இதுவரை 78 கொரோனா வைரஸ் தொற்றாளர் கண்டறியப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரத்து 264 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் தொடர்ந்தும் தேவையற்ற விதத்தில் வீடுகளைவிட்டு வெளியேறாமல் சுகாதார் வழிமுறைகளை பேணி கவனமாக இருக்குமாறு கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் தெரிவித்தார். (ஜ-4)

# ஆலய வழிபாடு

## ஏன்–எதற்கு – எப்படி



### கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

(தொடர்ச்சி)

கோவிலுக்குள் செல்ல முடியாதவர்கள், உடல் ஊனமுற்றோர் போன்றவர்கள் கோபுரத்தை தரிசனம் செய்தாலே போதும் கோவில் உள்ளே இருக்கும் எல்லா தெய்வங்களையும் வழிபட்ட பலன்கள் கிடைக்கும்.

அதுபோல கோபுரம் உச்சியில் வரிசையாக இருக்கும் கலசங்கள் ஏராளமான நன்மைகளை மனிதர்களுக்கு வாரி வாரி கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இந்தக் கும்ப கலசங்களை "ஷோடசாந்தம்" என்றும் சொல்வார்கள். கோபுர கலசங்கள் ஒற்றைப்படையாகவே இருக்கும்.

செம்பு, தங்கம் அல்லது ஐம்பொன்னால் உருவாக்கப்படும் இந்தக் கலசங்கள் உயிர் சக்தி எனப்படும் பிராண சக்தியை கிரகித்து சுத்தப்படுத்தி வெளியிடும் ஆற்றல் கொண்டவை.

இதற்கு அடிப்படையாக இருப்பவை இந்தக் கலசத்துக்குள் வைக்கப்படும் நெல், கம்பு, கேள்வரகு, திணை, வரகு, சோளம், மக்கா சோளம், சாமை, எள் போன்ற தானியங்கள்தான். அதிலும் இயற்கை சீற்றங்களில் இருந்து மக்களை காக்கும் வரகு தானியத்தை அதிகமாக வைப்பார்கள்.

அந்தக் காலத்தில் மழை 10 நாட்கள், 15 நாட்கள் என்று தொடர்ந்து பெய்யும். எனவே நெல் உள்ளிட்ட தானியங்களை பயிரிட விதைக்காக கொஞ்சம் எடுத்து பத்திரப்படுத்துவார்கள்.

உயரமான இடங்களில் அவற்றை நம் முன்னோர்கள் பாதுகாப்பாக வைத்தனர். அப்போது அவை பிரபஞ்ச சக்திகளை ஈர்ப்பதை உணர்ந்தனர். எனவேதான் ஆய கும்ப கலசங்களில் நெல், வரகு, திணை உள்ளிட்ட தானியங்களை வைத்ததாக ஒரு கருத்து உண்டு.

இந்தத் தானியக் கலவை இடி, மின்னல் போன்றவற்றை தாங்கும் சக்தி கொண்டது. தீயக் கதிர் வீச்சுகளை விரட்டும் ஆற்றல் படைத்தவை. ஊரின் உயரமான கோபுரத்தில் இருந்து இந்த சக்தி வெளிப்படும் போது ஊரே பாதுகாப்பாக இருக்கும்.

இதைக் கருத்தில் கொண்டே கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றார்கள். கோபுரக் கலசங்களை தொட்டு வரும் காற்று மருத்துவ குணம் கொண்டதாக இருக்கும்.

எனவே கோபுரம் அருகில் சென்று வழிபடும் போது உடல் புத்துணர்ச்சிபெறும். ஆன்மீக ஈர்ப்புடன் நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கும். அதனால்தான் கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றனர்.

கோபுர கலசங்களுக்குள் வைக்கப்படும் தானியங்களின் சக்தி இடி தாக்கினால் கூட சுமார் 7500 சதுர மீற்றர் பரப்பளவில் உள்ளவர்களை காப்பாற்றக் கூடியது.

ஆனால் 12 ஆண்டுகளுக்கே இந்த சக்தியின் வீரியம் இருக்கும். எனவேதான் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் செய்யப்படுகிறது.

அப்படி செய்வதால் கோபுர கலசங்கள் வானில் உலாவும் மின்காந்த அலைகளை ஈர்த்து நமக்கு கொடுத்து நமக்கு புத்துணர்ச்சி ஏற்படுத்துகின்றன. காலையில் செய்யும் கோபுர தரிசனம் நோய் தீர்க்கும்.

மதியம் கோபுர தரிசனம் செல்வவளத்தைத் தரும். மாலையில் செய்யும் கோபுர தரிசனம் பாவத்தை போக்கும். இரவில் கோபுர தரிசனம் செய்து வந்தால் முக்திபேறு கிடைக்க உதவும் என்கிறார்கள். இவ்வளவு சிறப்புகள் கொண்ட இராஜகோபுரத்தை வணங்கிய பிறகு என்ன செய்ய வேண்டும்? கொடிமரத்தை வழிபட வேண்டும்.



# கைதுகள்

## ஊரடங்கை மீறிய...

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று முன்தினம் முதல் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 201 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் இதன்போது 31 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

கடந்த மாதம் 4 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இதுவரை 2 ஆயிரத்து 193 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், 338 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. (ஜ-4)

## சட்டவிரோத செயற்பாட்டில்...

(கொழும்பு)

வாடகைக்கு வாகன சேவை வழங்கும் தனியார் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டிருந்த ஊரடங்கு கால அனுமதிப் பத்திரங்கள் மூன்றை வேறு நபருக்கு விற்பனை செய்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து, பண்டாரகம பிரதேசத்தில் சந்தே நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊரடங்கு கால அனுமதிப்பத்திரங்கள் மூன்றை 12 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஜ-4)

## குணமடைந்தோர் 5858

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 277 பேர் பூரணமான குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களில் 5 ஆயிரத்து 858 பேர் இதுவரை பூரணமாக குணமடைந்துள்ளனர்.

மேலும் 23 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 120 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 100 | 150 |
| தக்காளி | 80 | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 100 | 60 |
| கோவா | 60 | 80 | 100 | 100 |
| கரட் | 100 | 170 | 180 | 200 |
| பூசணி | 50 | 40 | 50 | 60 |
| புடோல் | 80 | 80 | 70 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்னவெங்காயம் | 250 | 220 | 200-280 | 240 |
| பெரியவெங்காயம் | 160 | 160 | 140-160 | 200 |
| பாகற்காய் | 200 | 240 | 180 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 50 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 | 120 |
| பயற்றங்காய் | 140 | 160 | 90 | 160 |
| லீக்ஸ் | 60 | 100 | 90 | 100 |
| பீற்றூட் | 80 | 80 | 80 | 100 |
| கறிமிளகாய் | 180 | 240 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 180 | 180 | 160 | 200 |
| போஞ்சி | 150 | 200 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 120 | 80 |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 30-40 | 50 |
| தேசிக்காய் | 160 | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 150 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 200 | -- | -- | 280 |
| முள்ளங்கி | 60 | 60 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 100 | -- | 120 |



# சிறுவர் அரங்கம்

## வைஷாலியின் பொய்



ஒரு ஊரில் ஜானகி ஆன்ட்டி இருந்தார். அவருக்கு ரமேஷ், விக்கி, வினோத், வைஷாலி என்று நான்கு குழந்தைகள். ஒருமுறை பிளம்ஸ் பழங்களை வாங்கினாள்.

குழந்தைகள் சாப்பிட்ட பிறகு பழங்களைத் தரலாம் என்று ஆன்ட்டிநினைத்தாள். பழங்கள் மேசை மீது ஒரு தட்டில் இருந்தன. வைஷாலி இதுவரை பிளம்ஸ் பழத்தைச் சாப்பிட்டதேயில்லை.

பழத்தைத் தின்று பார்த்து விட வேண்டும் என்ற ஆசையால் ஒரு பழத்தை எடுத்து சாப்பிட்டாள்.

எல்லோரும் சாப்பிட்ட பின்பு ஜானகி ஆன்ட்டி பழங்களை எண்ணிப் பார்த்தாள். ஒன்று குறைந்தது. ஆன்ட்டி ஒரு பிளம்ஸ் பழத்தை யாராவது சாப்பிட்டீர்களா? என்று குழந்தைகளைப் பார்த்துக் கேட்டாள்.

எல்லோரும் இல்லை என்று சொன்னார்கள். வைஷாலியும் அவர்களோடு சேர்ந்து நான் சாப்பிடவில்லை என்று சொன்னாள்.

ஒகே, யார் சாப்பிட்டிருந்தாலும்பரவாயில்லை. ஆனால் பிளம்ஸ் பழத்தில் விதை இருக்கும். சாப்பிடத் தெரியாமல் அந்த விதையையும் சேர்த்து சாப்பிட்டால் வயிற்றில் பெரியதாக பிளம்ஸ் மரம் முளைத்து விடும் என்றாள் ஜானகி ஆன்ட்டி.


வைஷாலி பயந்துபோய், இல்லை, நான் விதையை ஜன்னலுக்கு வெளியே எறிந்து விட்டேன் என்று கூறி அழத் தொடங்கினாள்.

பொய் சொன்னால் எப்படியும் மாட்டிக் கொள்கிறோம் பார்த்தாயா? இனி மேல் பொய் சொல்லக் கூடாது என்று வைஷாலியை சமாதானப்படுத்தினாள் ஜானகி ஆன்ட்டி.

**நீதி :**
**பொய் சொன்னால் ஒருநாள் உண்மை தெரிந்துவிடும்.**

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### ஜீலை-26




பல சமயங்களில் இங்கிருந்து நேரடியாகவே யுத்த களத்துக்குச் சென்றிருக்கிறார். அதனால் நம்மிடம் ஏதோ முக்கியமான விடயம் பற்றித்தான் பேசப் போகிறார் என்பது அலெக்சாண்டருக்குப் புரிந்தது.

இருவரும் ஆளுக்கொரு ஆசனத்தில் அருகருகே அமர்ந்தனர். முதலில் மன்னர் பிலிப்தான் பேச்சைத் தொடங்கினார்.

கிழக்கு திசையில் ஒரு வளமான நாடு இருக்கிறது. அதன் பெயர் இந்தியா. அங்கு இராமாயணம் என்கிற வீரகாவியம் உலகப் பிரசித்தி பெற்றது.

வைரங்களும் மரகதங்களும் மாணிக்கங்களும் கொட்டிக் கிடக்கின்றன. வற்றாத ஜீவநதியாக இருக்கின்ற கங்கை அங்குதான் இருக்கிறது. அதுதான் என் கனவு 'தேசம். அதை வெற்றி கொள்ள வேண்டும்.

மன்னர் பேசப்பேச அலெக்சாண்டருக்கு ஆச்சரியத்தில் புருவங்கள் உயர்ந்தன. மீண்டும் மன்னரே பேசினார்.

ஒருவேளை அதை என்னால் அடைய முடியாத பட்சத்தில் அதைச் சாதிக்க முடியும். வெறும் பணத்துக்காகவோ நகைக்காகவோ நாடு பிடிக்கும் நோக்கத்துக்காகவோ இதைச் சொல்கிறேன் என்று நினைத்து விடாதே.

நம்முடைய வீரம் பறைசாற்றப்பட வேண்டும். இந்தியக் கலாசாரத்தை நம்முடைய மக்களுக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டும். இந்த இரண்டும் தான் என்னுடைய நோக்கங்கள்.

தந்தையிடம் இருந்து வரும் ஒவ்வொரு வார்த்தையையும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான் அலெக்சாண்டர். அவர் பேசி முடித்ததும் அலெக்சாண்டர் சொன்னான்.

தந்தையே உங்களுடைய கனவைப் பூர்த்தி செய்வது என்னுடைய கடமை. அதற்காகக் கடுமையான உழைப்பைச் செலவிடத் தயாராக இருக்கிறேன். இன்று முதல் இந்தியா பற்றிய தகவல்களைச் சேகரிக்கப் போகிறேன்.

அன்று இரவு முழுக்க இந்தியா பற்றிய நினைவாகவே இருந்தது அலெக்சாண்டருக்கு.

எப்படி இருக்கும் அந்த நாடு? அங்குள்ள மனிதர்கள் எப்படிப்பட்டவர்கள்? பெரும் வீரர்களா? இந்திய மன்னர்களின் போர் முறை எப்படி இருக்கும்? ஆயுதங்கள்? யோசித்துக் கொண்டே தூங்கிப் போனான். அவனது கனவுக்குதிரை இந்தியாவை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. (தொடரும்)

மனிதனின் உண்மையான மதிப்பு, அவன் வழங்கவதில் உள்ளது; பெறுவதில் அல்ல.
- ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா தொற்று விடயத்தில் மனிதநேயத்தை பின்பற்றுங்கள்

இது 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அதிபர் ஒருவர் கூறிய விடயம்.

பிரஸ்தாப அதிபர் பாடசாலை விடுமுறைக் காலத்தில் இந்தியாவுக்குச் செல்வதன் பொருட்டு பயண அனுமதி எடுப்பதற்காக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் எல். இளங்கோவனைச் சந்தித்தார்.

இந்தியாவுக்குச் செல்வதற்கான அனுமதியை செயலாளர் தருவாரா? என்ற ஏக்கம் அந்த அதிபரிடம் இருந்தது.

செயலாளரைச் சந்தித்து இந்தியா சென்று வரப் போகிறேன் என்றார் அதிபர்.

நல்லது இந்தியாவுக்குச் சென்று வாருங்கள். அந்த நாட்டின் கலை, கலாசாரம், கல்வி முறைமை, பொருளாதார முயற்சிகள் இவற்றையெல்லாம் பார்த்து வாருங்கள்.

பொதுவில் அதிபர், ஆசிரியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று அந்த நாட்டு மக்களின் வாழ்வியலை அறிந்து கொண்டு அதனை மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் எனக் கூறினார் செயலாளர்.

இதைக் கேட்ட அந்த அதிபர் அதிர்ந்து போனார். பொதுவில் உயர் அதிகாரிகள் என்றால், அவர்கள் அனுமதி வழங்க மறுப்பார்கள் என்ற மனப்பதிவில் இருந்த அந்த அதிபருக்கு வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இளங்கோவன் கூறிய வார்த்தைகள் மிகப்பெரும் மகிழ்ச்சியையும் உத்வேகத்தையும் கொடுத்தன.

அதனை அவர் இன்னமும் ஞாபகப்படுத்திக் கொள்வார்.

உண்மையில் அதிகாரிகள், பணியாளர்களினதும் பொதுமக்களினதும் மனநிலையைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

எனினும் வட மாகாணத்தின் நிலைமை வித்தியாசம் என்பது அரச உத்தியோகத்தர்களின் எண்ணப்பாடு.

வடபகுதியில் உள்ள அரச உயர் அதிகாரிகள் சரி, தனியார் நிறுவனங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர்கள் சரி, அவர்கள் பணியாளர்களைக் கசக்கிப் பிழிந்து வேலை வாங்க வேண்டும் என்ற மனநிலையுடன் இருப்பதாகக் கருதப்படுகிறது.

இத்தகைய நிலைமையே அரச நிர்வாகங்களில் முரண்பாடுகளை மறைமுகமாகத் தோற்றுவித்து வினைத்திறனற்ற நிர்வாகத்தைத் தந்துவிடுகிறது.

இப்போது கொரோனாத் தொற்று வேகமாகப் பரவுகின்றது. ஒருவருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுவிட்டால் பிசிஆர் பரிசோதனை முதல் தனிமைப்படுத்தல் வரையில் மனித வாழ்வு வெறுத்துப் போய்விடும்.

எனினும் இன்னமும் நம் வடக்கு மாகாண நிர்வாகம் அரச பணியாளர்களின் விடயத்தில் நெகிழ்வான போக்கைக் கடைப்பிடிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுப் பரவலாக உள்ளது.

உதாரணத்துக்கு கடமை நிமிர்த்தம் வரவைப் பதிவு செய்வதற்கான கைவிரல் அடையாளத்தை பதிவிடுகின்ற இயந்திரத்தினூடாக கொரோனாத் தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளது என்றால்,

அதனைத் தற்காலிகமாகத் தவிர்த்து வரவுப் புத்தகத்தில் கையொப்பமிடுகின்ற நடைமுறையை பின்பற்றவும் என்ற தீர்மானத்தை எடுப்பதில் கூட நம் வடக்கு மாகாண தலைமை நிர்வாகத்தால் முடியவில்லை.

தவிர கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்காக மேல் மாகாண சபையின் நிர்வாகம் எடுத்த தீர்மானங்களை பார்க்கும்போது; நாம் மட்டும் அந்தத் தீர்மானங்கள் குறித்துச் சிந்திக்காமல், வேலை இருந்தால் என்ன? வேலை இல்லை என்றால் என்ன? பணியாளர்கள் கட்டாயம் அலுவலகங்களுக்கு வந்தாக வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

இஃது நிர்வாக முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது.

ஆக, தனித்து வேலை வாங்குதல் என்பதோடு மட்டும் நின்றுவிடாமல் அரச, தனியார் உத்தியோகத்தர்களின் நலன்களிலும் கருசனை காட்டுவது மிக உயர்ந்த வினைத்திறனைத் தந்தாகும். இதுபற்றிச் சிந்தனை செய்க.

## பாராளுமன்ற செய்தியாளர்கள் ஐவருக்கு கொரோனா

(கொழும்பு)

பாராளுமன்ற செய்தி சேகரிப்புக்காகச் சென்று கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகிய மேலும் ஓர் ஊடகவியலாளர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இதன்படி பாராளுமன்றச் செய்தி சேகரிப்பில் ஈடுபடும் ஊடகவியலாளர்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்துள்ளது.

இறுதியாக அடையாளம் காணப்பட்ட ஊடகவியலாளர் தமிழ்த் தொலைக்காட்சி ஒன்றில் பணிபுரிபவராவார்.

இத் தகவலை பாராளுமன்ற குழு உறுதிப்படுத்தியுள்ளது. (ஐ-4)

## மீன் வர்த்தகர்களுடன் தொடர்பு 200 பேருக்கு பி.சி.ஆர்.

(கெஸ்பேவ)

கெஸ்பேவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 20 மீன் வர்த்தகர்களுடன் தொடர்பிலிருந்த 200 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கெஸ்பேவ பஸ்தரிப்பிடத்தி லேயே குறித்த பரிசோதனை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து நேற்று வரை கெஸ்பேவ சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குள் 26 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனரென, சுகாதார வைத்திய அதிகாரி சமந்திகா விஜேசுந்தர தெரிவித்துள்ளார். (நி-4)

## கொழும்பில் அதிகரிக்கும் தொற்றாளர்கள்

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேல் மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் காரியாலயத்தின், கொரோனாப் பரவல் தொடர்பான நிலவர அறிக்கையில் இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி கம்பஹா மாவட்டத்தில் அதிகளவானோருக்கு இதுவரையில் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

அதற்கமைய கம்பஹா மாவட்டத்தில் 3 ஆயிரத்து 598 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம், கொழும்பு மாவட்டத்தில் 2 ஆயிரத்து 3 பேருக்கும் களுத்துறை மாவட்டத்தில் 297 பேருக்கும் கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. (ஐ-4)

## 2 ஆயிரத்து 452 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தல்

(கொழும்பு)

குருநாகல் மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவலின் காரணமாக இதுவரை 2 ஆயிரத்து 452 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் ஆர்.எம்.ஆர். ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப்பொருட்கள் அடங்கிய பொதிகளை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ஐ-4)

## பொது மக்களுக்கான அறிவிப்பு

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் தொடர்ச்சியாக சிகிச்சைகளுக்காக செல்லும் நோயாளர்களில், ஒரு மாதத்திற்கு போதுமான மருந்துகள் இல்லாதவர்களுக்கு, இன்று முதல் தபால் மூலம் மருந்துகளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் சேவையுடன் இணைந்து ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தை இதற்காக முன்னெடுக்க உள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த மருந்துகள், நோயாளர்களின் வீடுகளுக்கே கிடைக்கவேண்டுமாயின், அவர்களின் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் என்பனவற்றை வழங்க வேண்டும்.

நோயாளர்கள் தங்களின், மருத்துவ சிகிச்சை கையேடுடன், உண்மையான முகவரியை குறிப்பிட்டிருக்காவின், தாங்கள் சிகிச்சைபெறும் வைத்தியசாலையை தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு, தகவல்களை புதுப்பித்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-4)

## பி.சி.ஆர். இயந்திரம் மீண்டும் வழமைக்கு

(கொழும்பு)

முல்லேரியா வைத்தியசாலையில் செயலிழந்திருந்த பி.சி.ஆர். இயந்திரத்தின் நடவடிக்கைகள் முழுமையாக வழமைக்கு திரும்பியுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறித்த பி.சி.ஆர் இயந்திரம் அண்மையில் பழுதடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

அதன் பின்னர் அதனைத் திருத்துவதற்கு சீனாவிலிருந்து விசேட குழுவொன்றும் இலங்கைக்கு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கல்வி அமைச்சகம் மீளத் திறப்பு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்ட பத்தரமுல்ல பகுதியில் உள்ள கல்வி அமைச்சகம் இன்று முதல் மீண்டும் திறக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா குறிப்பிட்டுள்ளார்.


குறித்த பகுதிக்கு கொரோனா தொற்றாளர் ஒருவர் வந்து சென்றுள்ளமை கண்டறியப்பட்டமையைத் தொடர்ந்து இசுருபாய கட்டடம் நேற்று முன்தினம் தற்காலிகமாக மூடப்பட்டது.

மேலும், குறித்த கட்டடத்தில் தொற்று நீக்கும் நடவடிக்கை நிறைவு செய்யப்பட்டவுடன், மீண்டும் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தொற்று நீக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதை அடுத்து, கல்வி அமைச்சகம் இன்று திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# சத்திய தரிசனம்

## பொறுமை இனிக்கும்



- மற்றவர்களின் குறைகளை பொறுத்துக் கொள்பவன் கடவுளுக்கு இனிமை சேர்ப்பவனாக விளங்குகிறான்.
- வாழ்வில் நடப்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டு கடவுள் மீது நம்பிக்கை கொள்பவனே சிறந்த பக்தன்.
- மனத்தூய்மையுடன் வாழும் மனிதன் கடவுளின் அருளால் எப்போதும் நிம்மதியாக வாழ்வான்.
- கடவுளை இடைவிடாமல் தியானிப்பதால் எண்ணம், சொல், செயல் மூன்றும் தூய்மை பெறும்.
- பிறருடைய துன்பத்தில் இன்பம் காண்பது பாவம். பிறர் துன்பம் போக்க உதவுவது பெரும் புண்ணியம்.

# 3 ஆவது ஒருநாள் போட்டி

## பாகிஸ்தானை சுப்பர் ஓவரில் வீழ்த்தியது சிம்பாவே



ராவல்பிண்டியில் நடந்த 3 ஆவது ஒருநாள் போட்டியில் பாகிஸ்தானை சுப்பர் ஓவரில் வீழ்த்தி ஆறுதல் வெற்றி பெற்றது சிம்பாவே அணி.

சிம்பாவே அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் போட்டி மற்றும் 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இரண்டு ஒருநாள் போட்டிகளில் வென்ற பாகிஸ்தான் அணி 2-0 என தொடரைக் கைப்பற்றியுள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி ராவல்பிண்டியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற சிம்பாவே அணி முதலில் பட்டிங்கை தேர்வு செய்தது.

அந்த அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் விரைவில் அவுட்டாகினர். 22 ரன்கள் எடுப்பதற்குள் 3 விக்கெட்டை இழந்து தத்தளித்தது.

அடுத்து இறங்கிய பிரெண்டன் டெய்லர், சீன் வில்லியம்ஸ் நிதானமாக ஆடினர். டெய்லர் அரை சதமடித்தார். அவர் 56 ரன்னில் அவுட்டானார். அடுத்து இறங்கிய மதாவீர் 33 ரன்னும், ரசா 45 ரன்னும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் வில்லியம்ஸ் பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினார். அவர் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 118 ரன்கள் எடுத்தார்.

இறுதியில், சிம்பாவே அணி 50 ஓவர் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 278 ரன்கள் எடுத்தது.

பாகிஸ்தான் சார்பில் மொகமது ஹசைன் 5 விக்கெட்டு வீழ்த்தினார்.

இதையடுத்து, 279 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர்களான இமாம் உல் ஹக் 4 ரன்னிலும், பக்ர் சமான் 2 ரன்னிலும் அவுட்டாகினர்.

அடுத்து இறங்கிய கப்டன் பாபர் அசாம் பொறுப்புடன் ஆடி சதமடித்து அசத்தினார். அவருக்கு மற்ற வீரர்கள் ஒத்துழைப்பு அளிக்கவில்லை.

கடைசிக் கட்டத்தில் இறங்கிய வஹாப் ரியாஸ் அரை சதமடித்து, 52 ரன்னில் அவுட்டானார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 50 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 278 ரன்கள் எடுத்தது. இதனால் போட்டி சமனானது.

சிம்பாவே சார்பில் பிளெசிங் முசாராபானி 5 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து வெற்றியாளரை நிர்ணயிக்க சுப்பர் ஓவர் கடைப்பிடிக்கப்பட்டது. அதன்படி முதலில் ஆடிய பாகிஸ்தான் 2 விக்கெட் இழப்புக்கு 2 ரன்கள் மட்டுமே எடுத்தது.

அடுத்து ஆடிய சிம்பாவே அணி 5 ரன்கள் எடுத்து சுப்பர் ஓவரில் வெற்றி பெற்றது. இந்த ஆறுதல் வெற்றி மூலம் 1-2 என தொடரை நிறைவு செய்துள்ளது.

ஆட்ட நாயகன் விருது சிம்பாவே வீரர் பிளெசிங் முசாராபானிக்கு வழங்கப்பட்டது. தொடர் நாயகன் விருது பாகிஸ்தான் கப்டன் பாபர் அசாமுக்கு அளிக்கப்பட்டது. (ஜ-4)

## மும்பையை வீழ்த்தி பிளே-ஒப் சுற்றுக்குள் கம்பீரமாக நுழைந்த ஐதராபாத்



ஐ.பி.எல். தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதி லீக் ஆட்டத்தில் ஐதராபாத் அணி 10 விக்கெட்டுகளினால் மும்பையை வீழ்த்தி பிளே-ஒப் சுற்றுக்குள் கம்பீரமாக நுழைந்தது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெற்று வரும் 13 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் நேற்றைய 56 ஆவது போட்டியில ரோஹித் சர்மா தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் டேவிட் வோர்னர் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஐதரபாத் அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஐதராபாத் அணித் தலைவர் டேவிட் வோர்னர் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி, மும்பை இந்தியன்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடியது.

மும்பை அணி பிளே-ஒப் சுற்றை முன்னதாகவே எட்டியதல் ஹர்திக் பாண்டியா, பும்ரா உள்ளிட்ட முக்கிய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டது.

காயம் காரணமாக கடந்த சில போட்டிகளில் விளையாடாமல் இருந்த ரோஹித்சர்மா, இப் போட்டியில் களம் இறங்கினர்.

எந்த நெருக்கடியும் இன்றி விளையாடிய மும்பை இந்தியன்ஸ் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 149 ஓட்டங்களை சேர்த்தது.

இதையடுத்து, 150 ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஐதராபாத் அணி துடுப்பெடுத்தாடியது.

ஐதராபாத் அணியின் ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய டேவிட் வோர்னர்-விருத்திமான் சஹா ஜோடி இறுதி வரை நிலைத்து நின்று ஆடி, மும்பை அணியின் பந்துவீச்சை நாலாபுறமும் சிதறடித்தனர்.

டேவிட் வோர்னர் 9 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 58 பந்துகளில் 85 ஓட்டங்களையும் மறுமுனையில் விருத்திமான் சஹா 7 பவுண்டரிகள், 1 சிக்ஸருடன் 45 பந்துகளில் 58 ஓட்டங்களையும் சேர்த்தனர்.

இறுதியாக 17.1 ஓவர்களில் ஐதராபாத் அணி விக்கெட் இழப்பு ஏதுமின்றி 151 ஓட்டங்களை குவித்து 10 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்மூலம் ஐதராபாத் அணி புள்ளிப்பட்டியலில் 4 ஆவது இடத்திற்கு முன்னேறி தனது பிளே - ஒப் வாய்ப்பை உறுதி செய்துள்ளது.(ஜ-4)

## மரடோனாவுக்கு அறுவை சிகிச்சை



அர்ஜென்டினாவின் பிரபல கால்பந்தாட்ட ஜாம்பவான் டியாகோ மரடோனா வெற்றிகரமாக மூளை அறுவை சிகிச்சை செய்துள்ளார் என்று அவரது மருத்துவர் தெரிவித்துள்ளார்.

60 வயதான மரடோனா உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டு, திங்களன்று ஆர்ஜென்டினாவின் தலைநகரான புவெனஸ் ஐரிஸில் உள்ள சிகிச்சை நிலையத்தில் அனுமதிக்கப்பட்டு பின்னர், பிளாட்டாவில் உள்ள வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அதன் பின்னர் மரடோனாவின் மூளையில் ஏற்பட்ட இரத்த உறைவுக்கு வெற்றிகரமாக அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உலகின் மிகச்சிறந்த கால்பந்து வீரர்களில் ஒருவராகக் கருதப்படும் மரடோனா, நான்கு உலகக் கிண்ண போட்டிகளில் விளையாடினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## மன்னார் இலுப்...

வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம அலுவலகர்களுக் கான பதில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும், இலுப்பைக்கடவை கிராம அலுவலரான விஜி என அழைக்கப்படும் எஸ்.விஜியேந்திரன் (வயது-55) நேற்று முன்தினம் இரவு வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் கடமை முடிந்து தனது வீடு நோக்கி சென்று கொண்டிருந்தபோது கள்ளியடி ஆத்திமோட்டை பகுதியில் தாக் கப்பட்டுள்ளார்.

குறித்த கிராம அலுவலர் பள்ளமடு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப் பட்டு பின்னர் மன்னார் வைத்தியசாலை க்கு கொண்டு செல்லப்பட்டபோது உயிரி ழந்துள்ளதாக இலுப்பைக்கடவை பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (ம-3,285)

## கொரோனாவால்...

அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

கொழும்பு-13 பிரதேசத்தை சேர்ந்த 79 வயதுடைய பெண் ஒருவர் நேற்றுமுன் தினம் தனது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

எனினும் அவருக்கு மேற்கொண்ட பிசிஆர் பரிசோதனையில் அவர் கொரோனா தொற்றாளர் என உறுதியாகியுள்ளது.

அவர் கொரோனா வைரஸ் தொற்றுக் குள்ளாகியமையினால் ஏற்பட்ட மாரடைப் பினால் உயிரிழந்துள்ளார் என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வாள்வெட்டு...

இடம்பெற்றுள்ளது.

திருநெல்வேலி அம்மன் கோவில் பகுதியிலுள்ள வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்த அடையாளம் தெரியாதோர் இந்த வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தி யுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இதன்போது வீட்டிலிருந்த வயோதி பரின் இரு கைகளையும் குறித்த நபர்கள் வாளால் வெட்டி காயப்படுத்தியுள்ள நிலை யில், பாதிக்கப்பட்ட வயோதிபர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இந்த வாள்வெட்டு சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-3)

## விசேட கொரோ...

பாணம் கோப்பாய் தேசிய கல்வியியற் கல் லூரி கொரோனா விசேட வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

குறித்த கல்லூரியில் கொரோனாத் தொற்றாளர்கள் பராமரிக்கப்பட்டு அவர் களுக்கு சிகிச்சை வழங்கப்பட்டு விசேட வைத்தியசாலையாக அது செயற்படும் என்று தெரிவித்த அவர்,

முல்லைத்தீவில் தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டி ருந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் தொற்றுக் குள்ளான அடையாளம் காணப்பட்ட 18 பேர் தற்போது முல்லைத்தீவிலிருந்து கோப்பாய்க்கு அழைத்து வரப்பட்டுள்ள தாகவும் தெரிவித்தார். (ம-3)

## வடக்கில் 9 ஆயி...

நேற்று வடக்கு ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் தலைமையில் இடம்பெற்ற கொரோனா தடுப்பு செயலணிக் கூட்டத்தில் பேசப்பட் டுள்ளது.

குறிப்பாக யாழ்ப்பாணம் - 4500, வன்னி - 4500 என்ற அடிப்படையில் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் இருந் தும் சுமார் 9 ஆயிரம் பேரை இராணுவத் தில் இணைக்கவுள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தில் இணைக் கப்படுவோர் வடக்கில் வேலை செய்ய இடமளிக்கப்படுவதுடன், 60 ஆயிரத்திற் கும் அதிகமான மாதச் சம்பளம் வழங்கப் படும் எனக் கூறப்பட்டுள்ளது. (ம-3)

## அரிசிக்கு...

பட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட் டுள்ளது.

அதனுடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ சம்பா மற் றும் பச்சை அரிசி சம்பாவுக்கான அதிகபட்ச சில்லறை விலை 94 ரூபாயாக நிர்ண யிக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டரிசி ஒரு கிலோ 92 ரூபா யாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பச்சை அரிசி ஒரு கிலோவின் அதிக பட்ச சில்லறை விலை 89 ரூபாயாக நிர் ணயிக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவ கார அதிகார சபை அறிவித்துள்ளது.(ம-3)

## எமது உறவுகள்...

சனநாயக சோசலிச குடியரசின் அரசியல மைப்பையோ, பயங்கரவாத தடைச் சட்டத் தையோ மீறாத வகையில் நாம் எமது உறவுகளை நினைவுகூர்ந்த முன்னு தாரணமான முறையை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகிறேன்.

விசேடமாக 2019ஆம் ஆண்டு தாங்கள் இலங்கை நாட்டின் மேன்மை தங்கிய ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பின்னர் 2019 நவம்பர் 27ஆம் திகதி எமது உறவு கள், தமது பிள்ளைகளை நினைவுகூரு வதற்கு தங்களுடைய ஒத்துழைப்பு கிடைத் திருந்தமை பாராட்டத்தக்கது.

இலங்கை நாட்டில் நடைபெற்ற இனரீதி யான ஆயுதப் போர் முடிவடைந்து, போருக் குப் பின்னர் இந்த நாட்டின் அதிபராக தலைமையேற்றிருக்கும் தாங்கள் போருக் கான அடிப்படைக் காரணிகளை இல்லாமற் செய்து இலங்கைத் தீவின் முன்மாதிரி யான தலைவராக விளங்குவீர்கள் என்ற நம் பிக்கையில் எமது மக்களின் நம்பிக்கை களை யும், எதிர்பார்ப்புக்களையும் உங் களுக்கு இக் கடிதம் மூலம் வெளிப்படுத்துகின் றேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## 443...

றாளிகளாக கண்டறியப்பட்டனர். இதில் 25 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்து கண்டறியப்பட்டனர்.

418 பேர் ஏற்கெனவே தொற்றுக்கு உள்ளானவர்களின் இணைப்புக்களில் தொற்றாளிகளாக கண்டறியப்பட்டவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் முதல் இதுவரை காலம் கொரோனா தொற்றாளிகளாக கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 12,187 ஆக உயர்ந்துள் ளது. (ம-3)

## எதிர்க்...

அதிக வாக்குகள் பெற்று தொடர்ந்து முன் னிலையில் உள்ளார்.

டிரம்ப் குறைந்த வாக்குகள் வித்தி யாசத்தில் பின் தங்கி உள்ளார். தேர்தல் நிலை வரம் தொடர்பாக வெள்ளைமாளிகை யில் உரையாற் றிய அதிபர் டிரம்ப், 'நாம் மிகப்பெரிய வெற்றியை பெற்றி ருக்கிறோம். தேர் தலில் மகத்தான ஆதரவு அளித்த அமெரிக்க மக்களு க்கு நன்றி தெரிவித் துக் கொள்கிறோம் என்று தெரிவித்துள் ளார். (ம-3)

(இச் செய்தி அச் சுக்கு போகும்வரை கிடைத் தகவலின் படி)

## நாட்டை...

நேற்று நடை பெற்ற கொரோனா தடுப்பு செயலணி யின் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதன் போது மேலும் அவர் கூறு கை யில், சுகாதார பாதுகாப்பு நடை முறைகளை பின் பற்றும் பழக்கம் மக்களிடம் குறை வாக உள்ளது.

மக்கள் சுகாதார பாதுகாப்பு நடைமுறை களை பொறுப்புணர்வுடன் பின்பற்றினால் நாடு முடக்கப்படும் நிலையே அவசிய மற்றது. எது எவ்வாறிருப்பினும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை மிக இறுக்க மாகப் பின்பற்றியவாறு மக்கள் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும். அதற் கான தயார்படுத்தல்களை செய்ய வேண் டும் என்றார். (ம-3)

## மோ.சைக்கிள்...

ழுந்தவர் மணியந்தோட்டம் கொழும்புத் துறையைச்சேர்ந்த 26 வயதுடைய அன்ரன் ரமேஷ் சயந்தன் என்ற மதகுருவாவார்.

குறித்த மதகுருவும் அவரது சகோதர னும் நேற்று முன்தினம் இரவு யாழ்ப் பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்ற வேளை அரியாலை முள்ளிப்பகுதியில் திடீரென வீதியின் மறுபக்கம் சென்றுள்ளனர்.

இதனால் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த மதகுரு படுகாயமடைந்து மயங்கிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச் சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலை யில் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரி ழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)


மஹஜன சம்பத
திகதி 2020/11/04
சீட்டிழுப்பு இலக்கம் 4296
H 8 3 5 9 8 6

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04-11-2020 சீட்டிழுப்பு இலக்கம் 1069
T 1 5 2 2 6 1

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 04-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2591
D 12 39 67 77

மெகா பவர்
திகதி 04/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0663
A 11 01 28 53 66

செவன
திகதி 04/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 310
C 25 34 49 66

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1092
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2020.11.04
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 2,910,920/-
வெற்றி இலக்கங்கள் 38 54 58 72 Z

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2020.11.04
சீட்டிழுப்பு இல. : 3422
வர்ணம் : ஊதா
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 2,019,640/-
வெற்றி இலக்கங்கள் 14 26 39 58 M
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 8586

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1704
சீட்டிழுப்பு திகதி 04/11/2020
வெற்றி இலக்கங்கள் 25 29 43 45 S
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 55,663,452
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் 43,82,928/=
திகதி : 04.11.2020
வெற்றி வாரம் : 2973
வர்ணம் : பச்சை
வெற்றி இலக்கங்கள் 06 12 25 27 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,666,920

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1266
சீட்டிழுப்பு திகதி 04.11.2020
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்கிழமை
B 25 27 30 31
52,370,508/=
SUPER 500 7 7 3 9

சீட்டிழுப்பு வாரம் 23
சீட்டிழுப்பு திகதி 04/11/2020
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 09 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,200,100

## வடக்கு தனியார் பேருந்து சேவையை

# மாவட்டங்களுக்குள்ளேயே மட்டுப்படுத்தி சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களையும் சேர்ந்த தனியார் போக்குவரத்துக்களை மாவட்டங்களுக்குள்ளேயே மட்டுப்படுத்தி மக்களுக்கு சேவை வழங்குவதற்கு மாகாண பேருந்து உரிமையாளர்கள் சங்கங்களின் ஒன்றியம் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

பொதுப்போக்குவரத்தினால் கொரோனாத் தொற்று பரவுவதை கட்டுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக கிளிநொச்சி மாவட்ட பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் நா.நகுலராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தினர் இணைந்து குறித்த தீர்மானத்தினை எடுத்துள்ளனர்.

இருந்தபோதிலும் வெளி மாகாணங்களிலிருந்து போக்குவரத்துக்களை நிறுத்துவதற்கு அந்த அந்த மாவட்டங்களின் தனியார் பேருந்து உரிமையாளர்களும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே பொதுப் போக்குவரத்தின் ஊடாக கொரோனாவை கட்டுப்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரச பேருந்துகளும் வெளி மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்களை மட்டுப்படுத்தியுள்ள நிலையில் இனிவரும் காலங்களில் மாவட்டங்களுக்கு இடையில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சேவையினை வழங்குவதற்கு அவர்களும் பேச்சுக்களில் ஈடுபட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(ம-3,100,312)

# 3 வருடங்களுக்கு கொரோனா கொத்தணி பரவும் அபாயம்

## தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் நிஹால் எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எதிர்வரும் இரண்டு அல்லது மூன்று வருடங்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்றுடன் தொடர்புடைய கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளது என எச்சரிக்கப்பட்டுள்ளது.

தேசிய புத்திஜீவிகள் அமைப்பின் பொதுச் செயலாளரும் தொற்று நோயியல் நிபுணருமான வைத்தியர் நிஹால் அபேசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதனைக் கூறியுள்ளார்.

இவ்வாறான அபாய நிலை உள்ளமையால் அது தொடர்பில் தொடர்ந்து மக்களுக்கு அறிவுறுத்துவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரோக்கியமான ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்படும்போது, அவரது வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஏனைய நபர்களுக்குத் தொற்று ஏற்படும் அபாய நிலை உள்ளது என்றும் நிஹால் அபேசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்று நிலை குறித்து அனைவரும் மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ம-03)

# மருத்துவமனையில் அனுமதி மறுத்தால் உடனடியாக முறையிடவும்

(கொழும்பு)

மருத்துவமனைகளுக்கு சிகிச்சை பெறவரும் நோயாளர்களை பொறுப்பேற்க மறுக்கும் சுகாதார ஊழியர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

நோயாளர்கள் அவ்வாறு திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் அது குறித்து அறிவிக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அவ்வாறான நிலைமைகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என வைத்தியசாலைகளுக்கு வருகை தரும் நோயாளர்களை பொறுப்பேற்க மறுப்பு தெரிவிக்கும் சுகாதார ஊழியர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. நோயாளர்கள் அவ்வாறு திருப்பியனுப்பப்படும் பட்சத்தில் அது குறித்து அறிவிக்குமாறு மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ம-3)


## வேலையாள் தேவை

நெல்லியடியில் இயங்கும் சைவ உணவகத்திற்கு சமையல் உதவியாளர் தேவை. தங்குமிடம், உணவு வழங்கப்படும். சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். (C-629)

தொடர்பு : 077 219 0128

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், பலாலி றோட், கோண்டாவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
11/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
( கோண்டாவில் சந்திக்கு அருகாமை ) (4543)

074 075 4204, 077 505 8561

## உடனடி வேலை வாய்ப்பு

1. Translator ( English to Tamil)
2. News Presenter

(4536)

Contact No : 076 245 5533
Mail Id : hr.samugam@gmail.com

## வேலை வாய்ப்பு

உங்கள் குடும்ப வருமானத்தினை உயர்த்திட...
உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தினை வளமாக்கிட...
உங்கள் சொந்த வியாபாரத்தினை வளர்த்திட...
விரும்பும் இல்லத்தரசியா நீங்கள் !!!
அவ்வாறாயின் கீழ்க்கானும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.



(4542)

தொடர்பு : 076 285 5601

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், ஊரெழு, கரந்தன் குறுக்கு றோட், நீர்வேலி மேற்கு ராசா கடை அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
44 பரப்புக் காணி ஊரெழு ஆனந்தகானம் பகுதியில் உள்ளது. பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை. (4543)

076 640 0974, 077 894 9549


## மரண அறிவித்தல்

### ஞானப்பிரகாசம் திருச்செல்வம்



உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வராத்துப்பளை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் திருச்செல்வம் நேற்று (04.11.2020) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஞானப்பிரகாசம் - வியாகுலம் தம்பதியரின் பாசமிகு மகனும் செபமலரின் பாசமிகு கணவரும் றொபின்சன் (ஹொலன்ட்), றெஜிதா, விஜிதா (சுவிஸ்), வனிதா, நெவில்ஸன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான விசுவாசம், ஆசீர்வாதம் மற்றும் பாக்கியநாதன் காலஞ்சென்ற ஜேசுதாசன் மற்றும் அருளப்பு ஆகியோரின் உடன்பிறந்த சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிங்கராசா, ஜேம்ஸ், கிறிஸ்தம்மா, புலோமினா ஆகியோரின் மைத்துனரும் சாந்தி, ஜோன்பீற்றர், ஞானசீலன், ஞானசேகரன், ஜென்சி ஆகியோரின் மாமனாரும் ஜோகானஸ், ஜொயானா, ஜெரோம், கொலின்ஸ், செபஸ்ரின், பிரியதர்சன், ஜான்சன், சுபீட்ஷா, ஷாம், சீமோன், டியூசன், டிலோஜன், அஸ்வினா, துசானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.11.2020) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்லை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-632)

வராத்துப்பளை, பருத்தித்துறை. | 077 711 1290 | தகவல்:- குடும்பத்தினர்


## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK- 1025 /=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-505)

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## வேலை வாய்ப்பு

அலுவலக உதவியாளர் தேவை. தனியார் அலுவலகம் ஒன்றில் பணி புரிவதற்கு பெண் ஊழியர் தேவை. (C-631)

076 788 9697

## லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்? காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

அமெரிக்க அதிஸ்ட விசா



2022ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இன்னும் 03 நாட்களே
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
0768226244
55000 இலவச விசாக்கள்
கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.

நாங்கள் இன்று குடும்பத்துடன் அமெரிக்காவில் நிரந்தரமாக வாழ V2 Travels தான் காரணம். ஏனென்றால் V2 Travels போட்ட விளம்பரத்தினை பார்த்துத்தான் அமெரிக்க லொத்தர் விசாவிற்கு பதிவுசெய்தோம். எமக்கு அதிஸ்டம் கிடைத்ததை அறிவித்ததும் அவர்கள்தான். அமெரிக்கா செல்லும் வரை கூடவே துணையாக இருந்ததும் V2 Travels தான்.



ஞானதீபன் குடும்பம் அமெரிக்கா விசா வெற்றியாளர்
V2 Travels (C-505)

| | | | | |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237 |
| மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.